# திருமறைத்தீபம்

சீர்திருத்த காலாண்டிதழ்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No.2 of 2008**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Mt. Wellington, Auckland 1641
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

“கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.”

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*இன்னுமொரு இதழை உங்கள் கரத்தில் வைக்கும்படி கர்த்தர் எங்களுக்கு துணை செய்திருக்கிறார். பழைய இதழ்களைப் பெற்றுக்கொள்ளுவதில் ஆர்வம்காட்டி அவை தேவையானவர்கள் எங்களுக்கு எழுதி வருகிறீர்கள். எங்களால் முடிந்தவரை இருப்பதை சத்தியத்தில் ஆர்வம் காட்டுகிற உங்களுக்கு மகிழ்ச்சியோடு அனுப்பி வைப்போம். சிறப்பு விலைகளில் விற்பனையாகும் நூல்களைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள். இந்த வருட முடிவுக்குள் புதிய நூல்கள் சிலவற்றை வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். கர்த்தர் அந்தக் காரியத்தில் எங்களுக்கு துணைபோக ஜெபியுங்கள்.*

*இந்த இதழில் யாக்கோபு நூலுக்கான அறிமுகத்தைத் தந்திருக்கிறோம். பிரசங்கிகளும், போதகர்களும் வேதபோதனையளிக்குமுன் ஒவ்வொரு நூலின் ஆசிரியர் மற்றும் எழுதப்பட்ட சூழ்நிலை, எழுத்து நடை என்பவற்றை ஆராய்ந்து பார்த்த பின்பே நூலிலிருந்து பிரசங்கங்களை அளிக்க வேண்டும். அத்தகைய போதனையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அநேகர் இருக்கிறார்கள். வேத நூல்களின் பின்னணியை அறிந்துகொள்ளாமல் வேத செய்தி கொடுக்க முயலும் போது கர்த்தரின் செய்தி பாதிக்கப்படும்; கர்த்தர் கொடுத்திருக்கின்ற செய்தியை அறிந்துகொள்ள முடியாமல் போகும். இதை இன்றைய பிரசங்கிகளும், போதகர்களும், உணர்வதில்லை. அந்தளவுக்கு கேவலமான நிலையில் இன்றைக்கு பிரசங்கம் இருக்கிறது. யாக்கோபு நூலின் அறிமுகம் உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன்.*

*இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் பரிசேயர்களின் நீதியைவிடத் தன்னை விசுவாசிப்பவர்களுடைய நீதி அதிகமாக இருக்க வேண்டும் என்றார். அதன் அர்த்தத்தை விளக்கி இந்த இதழில் ஒரு ஆக்கத்தைத் தந்திருக்கிறேன். பரிசேயர்கள் இன்று நம்மத்தியில் இல்லாதபோதும் பரிசேயர்களை நினைவுபடுத்தும் பிசப்புக்களையும், ரெவரண்டுகளையும் தமிழினத்தில் பார்க்கத்தான் செய்கிறோம். தேவநீதியை விளங்கிக் கொள்ளாமல் அதற்கு மாம்சத்துக்குரியவிதத்தில் அர்த்தம் கற்பித்து இன்றும் பரிசேயர்களைப் போல வாழ்ந்து நம்மை வழிநடத்த முயலுபவர்களிடம் இருந்து நாம் விடுதலை அடைய வேண்டும். கர்த்தரின் நீதியே நம் நீதியாக இருக்க வேண்டும். தேவ நீதியைக் கொண்டிருப்பவர்களுக்கே பரலோக ராஜ்யம். - ஆசிரியர்.*

# யாக்கோபு

## - வரலாற்றில் அலட்சியம் செய்யப்பட்ட நூல் -

**புதிய ஏற்பாட்டின் யாக்கோபு நூல் வரலாற்றில் அதிகம் அலட்சியப்படுத்தப்பட்ட நூல். இந்த இதழில் யாக்கோபு நூலை உங்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இந்த ஆக்கம் யாக்கோபு நூலின் உள்ளடக்கத்தை முழுமையாக விளக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. யாக்கோபு நூலின் பின்னணி விபரங்களைத் தொகுத்து நூலின் பிரதான போதனையை சுட்டிக்காட்டியிருக்கிறேன். முக்கியமாக நூலை எழுதிய ஆசிரியரின் விசேட குணாதிசயங்களை வெளிப்படுத்தியிருக்கிறேன். யாக்கோபு நூலை ஆராய்ந்து படித்து அதன் வல்லமையான செய்தியை நீங்கள் விளங்கிக்கொள்ள இந்த அறிமுகம் துணை செய்யுமானால் இந்த ஆக்கத்தின் நோக்கம் நிறைவேறியதாக இருக்கும். - ஆசிரியர்.**

*புதிய ஏற்பாட்டு நூலான யாக்கோபு வரலாற்றில் அதிகம் அலட்சியப்படுத்தப்பட்ட ஒரு நூல். பல நூற்றாண்டுகாலமாக அது பரிசுத்த ஆவியினால் அனுமதிக்கப்பட்ட நூல்தானா? என்ற கேள்வியைப் பலர் எழுப்பியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு சீர்திருத்தவாத காலத்தில் கர்த்தர் பயன்படுத்திய பெருமனிதரான மார்டின் லூதர் யாக்கோபு நூலைப்பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். ஒரு கிறிஸ்தவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நடைமுறையில் செயல்படாத விசுவாசம் செத்த விசுவாசம் என்று யாக்கோபு எழுதியிருந்ததால் அதைத் தவறாகப் புரிந்துகொண்ட மார்டின் லூதர் யாக்போது கிரியைகளின் மூலம் இரட்சிப்பு கிடைக்கும் என்று போதிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். அதன் காரணமாக லூதர் தான் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்த வேதத்தில் யாக்கோபு நூலை புதிய ஏற்பாட்டில் இணைக்காமல் பின் இணைப்பாக நூலின் கடைசிப்பகுதியில் சேர்த்திருந்தார். காலஞ்செல்லச் செல்ல லூதரின் கருத்துக்களில் மாற்றம் ஏற்பட அவர் யாக்கோபுவை புதிய ஏற்பாட்டில் எபிரெயர் நூலுக்குப் பிறகு தன்னுடைய மொழிபெயர்ப்பில் சேர்த்துக்கொண்டார். இருந்த போதும் அந்தப்பக்கங்களுக்கு அவர் எண்களிடவில்லை. லூதரின் இந்த சிந்தனைப் போக்கிற்கு என்ன காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அக்காலத்தில் ரோமன் கத்தோலிக்க மதம் கிரியைகளினால் விசுவாசத்தை மனிதன் அடையலாம் என்று போதித்து வந்ததால் அதற்கெதிராகக் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டு மெய்க்கிறிஸ்தவத்தை நிலைநாட்ட சீர்திருத்தவாதிகள் போராடினார்கள். இதனால் கிரியைகளினால் விசுவாசத்தைப் பெறலாம் என்று தென்படும் எந்தப்போதனையையும் லூதரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. யாக்கோபு அத்தகைய போதனையைத் தருவதாக லூதர் தவறாக எண்ணியதால் அது புதிய*

ஏற்பாட்டில் இணைக்கப்படக்கூடாது என்று அவர் கருதினார். ஆனால், யாக்கோபு கிரியைகளினால் விசுவாசத்தை அடையலாம் என்று போதிக்க வில்லை. மாறாக, மெய்யான விசுவாசத்தை எவரும் கொண்டிருந்தால் அது மெய்யான விசுவாசம் என்று இனங்காட்டக்கூடிய விதத்தில் அவர்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்துக்குரிய கிரியைகள் இருக்க வேண்டும் என்றே யாக்கோபு போதிக்கிறது.

## எழுதியவர் யார்?

இந்த நூலை எழுதியவர் யார்? என்ற கேள்வியோடு இந்த நூலையும் அதன் போதனைகளையும் நாம் இனி ஆராய்வோம். நூலின் ஆரம்ப வரிகளில் இதை எழுதியவர் யாக்கோபு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், எந்த யாக்கோபு என்ற கேள்வி எழுகிறது. புதிய ஏற்பாட்டில் நாம் ஒன்றுக்கு மேற்பட்ட யாக்கோபுகளைப் பற்றிய குறிப்புகளைக் காண் கிறோம். யாக்கோபு என்ற பெயர் முதலாம் நூற்றாண்டுகளில் பொதுவாகப் பயன் படுத்தப்பட்டிருக்கிற ஒரு பெயர். இது எபிரெய மொழியில் இருந்து வந்த பெயர். புதிய ஏற்பாட்டில் நான்கு யாக்கோபுகளைப் பற்றி நாம் வாசிக்கி றோம். இந்த நூலை யார் எழுதியது என்பதை அறிந்துகொள்ள அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் நாம் ஆராய்வது அவசியம்.

1. செபதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமான யாக்கோபு

கி.பி 44ல் இந்த யாக்கோபு அரசனான ஏரோது அக்கிரிப்பாவால் கொலை செய்யப்பட்டான். இது பற்றி மத்தேயு 4:17-22 பின்வருமாறு விளக்குகிறது. “அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர் களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிற வர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக் குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபதெயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபதெயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.”

இந்த யாக்கோபுவின் பெயர் புதிய ஏற்பாட்டில் எப்போதும் அவனு டைய சகோதரனான யோவானின் பெயரோடு இணைத்தே எழுதப் பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் செபதெயுவின் பிள்ளைகள். இவர்கள் இருவரையும் பற்றி வேதம் “இடிமுழக்க மக்கள்” என்று குறிப்பிடுகிறது. சக கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலும், சமுதாயத்திலும் அந்தப் பெயருக்குப் பொருத்தமானவிதத்தில் அவர்கள் நடந்துகொண்டிருந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே இவர்களுக்கு இந்தப் பெயரைத் தந்திருக்கிறார். இதைக் குறித்து நாம் மாற்கு 3:17ல் வாசிக்கிறோம். “செபதெயுவின் குமாரனாகிய

யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்."

லூக்கா 9:51-56 வரையுள்ள வசனங்கள் இவ்விருவருடைய குணாதிசயத்தைப்பற்றி விளக்குகிறது. "பின்பு அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி, தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே1 எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்படி அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்." செபதெயுவின் குமாரர்கள் இருவரும் இடி இடிப்பது போன்ற பேச்சையும், நடவடிக்கைகளையும் கொண்டிருந்ததால் அவர்களுக்கு இடிமுழக்க மக்களென்ற பெயரை இயேசு கொடுத்தார்.

இவர்கள் இருவருமே கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் உற்சாகமிக்க தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். அரசனான ஏரோது கிறிஸ்தவம் நாட்டில் பரவி வருவதைக் கண்டு அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுத்தான். கிறிஸ்தவர்கள் மத்தியில் முக்கிய தலைவர்களாக செபதெயுவின் பிள்ளைகள் இருந்ததால் அவர்களில் யாக்கோபுவைக் கொலை செய்தான். யாக்கோபுவின் கொலையைப் பற்றிய வரலாற்றுக்குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. "யாக்கோபுவைத் தொலைப்பதற்கு யாக்கோபுவுக்கு எதிராக சாட்சி சொல்லுவதற்கு ஏரோதுக்கு எவராவது தேவைப்பட்டது. அப்படியொருவனை அரசன் ஏரோது தயார்செய்து யாக்கோபு பிடிக்கப்பட்டு வைத்திருந்த இடத்துக்கு கொண்டு வந்தான். யாக்கோபுவைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருடைய பெருந்தைரியத்தை உணர்ந்து யாக்கோபுவுக்கு எதிராக சாட்சி சொல்ல வந்தவன் அவருடைய காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். அது மட்டுமல்லாமல் தானும் ஒரு கிறிஸ்தவன் என்று பகிரங்கமாக அறிவித்து யாக்கோபுவுக்காகப் பரலோகத்தில் காத்திருக்கும் இரத்தம் சிந்தியவர்களுக்கான கிரீடத்தில் தானும் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்." அவர்கள் இருவருமே உடனடியாக ஏரோதினால் கொலை செய்யப்பட்டனர். இது பற்றி அப்போஸ். 12:1-2 வசனங்கள் பின்வருமாறு விளக்குகிறது.

செபதெயுவின் குமாரர்களில் ஒருவரான இந்த யாக்கோபு, யாக்கோபு நூலை எழுதவில்லை. இந்த யாக்கோபு நூலை எழுதினார் என்பதற்கு தெளிவான எந்த சாட்சியங்களும் இல்லை. இருந்தபோதும் இந்த யாக்கோபு

*தேவ இராஜ்ஜியம் இந்த உலகத்தில் விஸ்தரிப்பதற்கு பெருந்தியாகங்களைச் செய்து கிறிஸ்துவின் நல்லூழியனாக இருந்திருக்கிறார்.*

2. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு

*கிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவர் இந்த யாக்கோபு. இதை மத்தேயு 10:3லும், அப்போஸ். 1:13லும் வாசிக்கிறோம். இவர் யாக் கோபு நூலை எழுதினார் என்பதற்கும் பெரும் சாட்சியங்கள் எதுவும் இல்லை. இந்த யாக்கோபு இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்ததனால் யூதர்கள் இவரைக் கொலை செய்தார்கள் என்று வரலாற்றுக் குறிப்புகள் சொல்லுகின்றன. எருசலேம் ஆலயத்திற்குப் பக்கத்தில் இவர் புதைக்கப்பட் டார். இவரும் யாக்கோபு நூலை எழுதவில்லை.*

3. அப்போஸ்தலனாகிய யூதாஸின் தந்தையான யாக்கோபு

*இந்த யாக்கோபுவைப் பற்றி லூக்கா 6:16ல் மட்டுமே வாசிக்க முடிகிறது. இவரைப் பற்றி மேலும் எந்த விபரங்களும் நமக்குக் கிடைப்பதில்லை. இவரும் யாக்கோபுவை எழுதியவராக இருப்பதற்கு வாய்ப்பில்லை.*

4. இயேசு கிறிஸ்துவின் சகோதரரான யாக்கோபு

*இந்த யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களில் ஒருவர். மாற்கு 6ம் அதிகாரம், மத்தேயு 13:55, கலா. 2:9 ஆகிய வேதபகுதிகள் இந்த யாக்கோபுவைப் பற்றிய விபரங்களைத் தருகின்றன. இயேசு கிறிஸ்து யூத ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தபோது அதைக் கேட்ட மக்கள் மத்தேயு 13:54-57ல் பின்வருமாறு கூறினார்கள், "தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கை களும் எப்படி வந்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல் லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல் லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி, அவரைக்குறித்து இடற லடைந்தார்கள்." இதிலிருந்து இந்த யாக்கோபு திருமண பந்தத்தின் காரணமாக யோசப்புக்கும், மரியாளுக்கும் பிறந்த பிள்ளைகளில் முதலாவ தானவர் என்று அறிந்துகொள்ளுகிறோம். இயேசு பரிசுத்த ஆவியின் காரணமாக கன்னியாக இருந்தபோது மரியாளின் வயிற்றில் பிறந்தவர் என்பது நமக்குத் தெரியும். இந்த யாக்கோபுவே யாக்கோபு நூலை எழுதியவர் என்பதற்கு மிகவும் அழுத்தமான பாரம்பரிய சாட்சியும், வேதம் அளிக்கும் சாட்சியங்களும் இருக்கின்றன. இவர்தான் யாக்கோபுவை எழுதி யிருக்க வேண்டும் என்பதற்கு இந்த யாக்கோபுவின் வாழ்க்கையும், கிறிஸ்து வுக்கு அவர் செய்த பணிகளும் பெரும் சாட்சியங்களாக இருக்கின்றன.*

## யார் இந்த யாக்கோபு?

*யாக்கோபு நூல் அதை எழுதிய யாக்கோபுவைப் பற்றி மிகச்சுருக்கமான விபரத்தையே தருகின்றது. நூலின் முதலாவது வசனம், "தேவனுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு" என்றிருப்பதை வாசிக்கிறோம். இந்நூலில் யாக்கோபு பற்றி இந்த ஒரு*

விபரத்தை மட்டுமே அறிந்துகொள்ளுகிறோம். இந்த யாக்கோபு இயேசு கிறிஸ்துவினுடைய சகோதரர் என்பதை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். இவர் யோசேப்புக்கும் மேரிக்கும் திருமணத்தொடர்பின் மூலமாகப் பிறந்த முதலாவது மகன். இயேசு கிறிஸ்து மரியாள் கன்னியாக இருக்கும்போது மத்தேயு 1:18ன்படி பரிசுத்த ஆவியின் மூலமாக அவளுடைய வயிற்றில் பிறந்தார். அதற்குப் பிறகு யோசேப்புக்கும், மரியாளுக்கும் திருமணத் தொடர் பின்காரணமாக மேலும் சில குழந்தைகள் பிறந்தார்கள். இந்த விபரங்கள் மிகவும் முக்கியமானவை. ஏனெனில், ரோமன் கத்தோலிக்க மதம் மரியாளை தெய்வீகப் பிறவியாகப் பாவித்து, அவள் திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து கன்னியாகவே இருந்தாள் என்று மக்களை நம்ப வைப்பதற்காக இயேசுவுக்குப் பிறகு யோசேப்புக்கு பிறந்த குழந்தைகள் எல்லாம் வேறொரு மரியாளுக்குப் பிறந்ததாக கதைகட்டிவிட்டிருக்கிறது. ரோமன் கத்தோலிக்க மதம் கட்டிவிட்டிருக்கும் பல பொய்களில் இதுவும் ஒன்று.

யோசேப்பும், மரியாளும் இயேசு பிறப்பதற்காக கர்த்தரால் பயன்படுத்தப் பட்ட சாதாரண மனிதப் பிறவிகள். பரிசுத்த ஆவியின் மூலமாக மரியா ளின் வயிற்றில், அவள் யோசேப்போடு எந்த சரீர உறவும் வைத்துக் கொள்ளுவதற்கு முன்பாக இயேசு பிறந்தார். அதற்குப் பிறகு யோசேப்பும், மரியாளும் சாதாரணமாக திருமணமானவர்கள் எல்லோரும் வாழ்வது போலவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கர்த்தரை விசுவாசித்து வாழ்ந்த இருவரும் கர்த்தரை மகிமைப்படுத்தும்விதமாக, கர்த்தர் ஒவ்வொரு திருமணமான குடும்பத்திடமும் எதிர்பார்க்கும் கடமைகளை நிறை வேற்றும்வகையில் பிள்ளைகளைப் பெற்று வளர்த்திருக்கிறார்கள். கர்த்தரை நேசிக்கும் திருமணமான ஒவ்வொரு பெண்ணும் செய்வதையே மரியாளும் செய்திருக்கிறாள்.

மரியாளுக்குப் பிறந்த, இயேசுவின் சகோதரர்களும், சகோதரிகளும் ஒரே வீட்டில் இயேசுவோடு வாழ்ந்திருக்கிறார்கள். இயேசுவின் வாழ்க்கையையும், நடவடிக்கைகள் அனைத்யையும் பார்த்தும், பேசியும் இணைந்தும் வாழும் பெரும் பாக்கியத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். மனிதனாக பிறந்திருந்தபோதும் ஆண்டவராக இருந்த இயேசு கிறிஸ்து சிறுவயதிலேயே வார்த்தையால் நிரம்பியிருந்தார். அவருடைய நாவிலிருந்து வரும் நல்ல போதனைகளையும் அவருடைய உடன் பிறப்புக்கள் சிறுவயதிலிருந்தே கேட்டு வளர்ந்திருக்கிறார்கள். இயேசு பாவமில்லாமல் பிறந்தவர். எந்தப் பாவமும் அவரில் இருக்கவில்லை. பாவமற்றும், பத்துக் கட்டளைகளைப் பூரணமாக நிறைவேற்றும்வகையில் அவர் வீட்டிலும், வெளியிலும் நடந்துகொண்ட விதத்தையும், வாழ்ந்து காட்டியதையும் அவர்கள் நேரில் பார்த்து வளர்ந்திருக்கிறார்கள். இத்தனை ஆசீர்வாதங்களை அவர்கள் அடைந்திருந்தும், ஒரே வீட்டில் இருந்து வளர்ந்திருந்தும் யாக்கோபு இயேசுவை மேசியாவாக அறிந்திருக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ இல்லை. யோவான் 7:5 சொல்லுகிறது, “அவருடைய சகோதரரும் அவரை விசுவாசி யாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.” அது மட்டுமா? மாற்கு 3:21 சொல்லுகிறது, “அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி

வந்தார்கள்." இயேசுவினுடைய பேச்சையும் செய்கைகளையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசுவுக்கு சிந்தனைக்கோளாறோ என்று கூட அவர்கள் நினைத்தார்கள்.

இவற்றில் இருந்து நாம் முக்கியமான ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். இயேசுவின் இனத்தார் இயேசுவின் பக்கத்திலிருந்து அவரோடு வளரும் ஆசீர்வாதத்தை அடைந்திருந்தபோதும் அவர்களால் இயேசுவை விசுவாசிக்க முடியவில்லை. இதிலிருந்து, கர்த்தர் மட்டுமே ஒருவருக்கு இரட்சிப்பை அளிக்க முடியும் என்பதை உணர வேண்டும். இரட்சிப்பு கர்த்தரிடம் இருந்து வருகிறது. ஆதாமும், ஏவாளும் தங்களுடைய குழந்தை களுக்கு முன்பு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தபோதும் அவர்களுடைய பிள்ளையான காயின் மனந்திரும்பவில்லை. கிறிஸ்தவ பெற்றோர்கள் பரிசுத்தமாக வாழ்ந்து, குடும்ப ஆராதனை நடத்தி, பிள்ளைகளுக்கு முன் சாட்சிகளாக இருந்து, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியது அவர்களுடைய கடமை. இந்தக் கடமையை எவரும் உதாசீனப்படுத்தவோ அல்லது அதிலிருந்து தவறுவதோ கூடாது. இருந்தபோதும் இத்தனையையும் தவறாது செய்து வருகிற நேரத்தில் பிள்ளைகளின் இரட்சிப்புக்கு நாம் கர்த்தரிலேயே தங்கியிருக்க வேண்டும். பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு இரட்சிப்பை அளிக்க முடியாது. கர்த்தர் மட்டுமே மறுபிறப்பாகிய அனுப வத்தை எவருக்கும் கொடுக்க முடியும்.

யாக்கோபு தொடர்ந்தும் அவிசுவாசியாக இருந்துவிடவில்லை என்பதை நாம் உணர்வது அவசியம். யாக்கோபு கிறிஸ்துவை எப்படி, எப்போது விசுவாசித்தார்? என்பதை இனிக் கவனிப்போம். 1 கொரி. 15:4-7 இதை அறிந்துகொள்ள உதவுகிறது. "அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அரர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரை யடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும் அதன்பின்பு அப்போஸ்தலரெல் லோருக்கும் தரிசனமானார்." உயிர்த்தெழுந்த பின்பு இயேசு கிறிஸ்து தன்னுடைய சகோதரனான யாக்கோபுக்கு தரிசனமானார். அப்போஸ்தலர் களுக்கும் குறிப்பிட்ட தொகையினருக்கும் தரிசனமளிக்க இயேசு கிறிஸ்து யாக்கோபுவுக்கு தனிப்பட்ட விதத்தில் தரிசனமளித்திருக்கிறார். அப்படி அவர் தரிசனமளித்தவர்களில் யாக்கோபுவின் பெயர் மட்டுமே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காரணமில்லாமல் வேதம் அதை நமக்கு தெரிவிக்கவில்லை. இங்கே நாம் இயேசு உயிரோடிருந்தவரை யாக்கோபு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளு கிறோம். யூதனாக இருந்து கர்த்தரை யாக்கோபு விசுவாசித்திருந்தபோதும் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு மரித்து உயிர்த் தெழுந்து நேரடியாகக் காட்சியளித்தபோதே யாக்கோபுவின் ஆத்மீகக் கண்கள் திறந்து இயேசுவில் விசுவாசம் பிறந்தது. அதனால்தான், யாக்கோபு 1:1ல் "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், ஊழியக்காரனாகிய யாக்கோபு" என்று யாக்கோபு எழுதியிருப்பதை வாசிக்கிறோம். தேவனை

விசுவாசித்து வாழ்ந்திருந்த யாக்கோபு இப்போது இயேசு கிறிஸ்துவை தேவனுடைய ஒரே குமாரனாகவும், கர்த்தராகவும் விசுவாசிக்கிறார். அவருடைய ஊழியக்காரனாக தன்னை அறிவித்துக் கொள்ளுகிறார். இப்போது அவர் இயேசுவை தன்னுடைய சகோதரனாகவும், இனத்தானா கவும் மட்டும் பார்க்கவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகப் பார்க்கிறார். யாக்கோபுக்கு இப்போது சத்தியத் தெளிவு ஏற்பட்டுவிட்டது. இயேசு கிறிஸ்து நேரடித் தரிசனமளித்து யாக்கோபு இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள கிருபை பாராட்டினார்.

விசுவாசியான பிறகு யாக்கோபு விசுவாச வாழ்க்கையில் உயர்ந்து மற்றவர்களால் மதிக்கப்படுமளவுக்கு கிறிஸ்தவ தலைவர்களில் ஒருவரா னார். பவுல் தான் மனந்திரும்புதலை அடைந்தபிறகு அப்போஸ்தலர்களை எருசெலேமில் சந்திப்பதற்கு முன்பாக முதலில் யாக்கோபையே சந்தித்திருக்கிறார். இது பற்றி பவுல் கலா. 1:19ல் பின்வருமாறு குறிப்பிடு கிறார். "கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தல ரில் வேறொருவரையும் நான் காணவில்லை." பவுல் மனந்திரும்பிய பிறகு யாக்கோபு அவருக்கு ஆத்மீக உதவியளித்திருக்கிறார். பேதுரு சிறையிருந்து விடுதலையானபோது அந்தச் செய்தி முதலில் யாக்கோபுக்கே அறிவிக்கப் பட்டது. அப்போஸ்தல நடபடிகளின் ஓர் அதிகாரம் யாக்கோபையும் அப்போஸ்தலராக அறிவிக்கிறது. அதாவது பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராக இல்லாமல், கிறிஸ்துவின் சேவகரும், கிறிஸ்தவ சபையின் முக்கிய தலைவர்களில் ஒருவர் என்ற அர்த்தத்திலும் இந்தப் பதம் யாக்கோபைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யாக்கோபு எருசலேமில் தங்கியிருந்து அங்கிருந்த திருச்சபையின் முக்கிய தலைவர்களில் ஒருவரானார்.

யாக்கோபு 'நீதிமான்' என்று அழைக்கப்பட்டார். பவுல் யாக்கோபைப் பற்றிக் கலாத்தியர் 2:9ல் திருச்சபையில் மூன்று முக்கிய தலைவர்களில் ஒருவராகக் குறிப்பிடுகிறா, "எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்த போது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும்" என்று பவுல் எழுதுகிறார். இதிலிருந்து ஆதிசபையின் மூன்று பெருந்தூண் களில் ஒருவராக யாக்கோபுவை சபை அங்கீகரித்திருந்ததை அறிந்து கொள்ளுகிறோம்.

இதற்குப் பிறகு மறுபடியும் அப்போஸ். 15ல் யாக்கோபை சந்திக்கிறோம். இங்கே யாக்கோபு எருசலேம் திருச்சபையின் முக்கிய தலைவராக இருப்பதைப் பார்க்கிறோம். அப்போஸ்தலர்களும், அந்தியோகியா சபைப் பிரதிநிதிகளும் கூடிவந்து விருத்தசேதனத்தைப் பற்றிய பிரச்சனையைத் தீர்ப்பதற்காக ஆலோசனை செய்தபோது யாக்கோபே அந்தக் கூட்டத்தில் பேசியதை வாசிக்கிறோம். யூதர்கள் யூத இனத்தில் இணைந்துகொள்ளுகிற யூதரல்லாத அனைவரும் விருத்தசேதனத்தைச் செய்துகொள்ள வேண்டும் என்ற கோட்பாடு அநேக காலமாக யூதர்கள் மத்தியில் இருந்து வந்தது. அது மட்டுமல்லாமல் ஏனைய யூத மத சடங்குகளையும் அவர்கள் பின்பற்ற வேண்டியிருந்தது. ஆனால், யூதரல்லாத மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்து திருச்சபையில் இணைந்தபோது இது ஒரு பிரச்சனையாக மாறியது.

மேசியாவாகிய கிறிஸ்துவை விசுவாசித்து திருச்சபையில் இணைகிறவர்கள் தொடர்ந்தும் விருத்தசேதனத்தைப் பின்பற்ற வேண்டுமா? என்பதே அந்தப் பிரச்சினை. அப்போஸ்தலனாகிய பவுல் அந்தக் கூட்டத்தில் இப்போது நாம் புதிய உடன்படிக்கைக் காலத்தில் இருக்கிறோம். விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் தவிர விசுவாசிகளின் கூட்டத்தில் இணைந்து கொள்ள வேறு நிபந்தனைகள் இல்லை என்று கூறினார். இந்த சமயத்தில் யாக்கோபு பிரச்சனை தீர தகுந்த ஆலோசனை வழங்கியதை அப்போஸ். 15ல் வாசிக்கிறோம். யாக்கோபு யூதனாக இருந்து கிறிஸ்துவை விசுவாசித்தவர். யூத சடங்குகளை யூதனாக இருந்தபோது தவறாது பின் பற்றியவர். இப்போது, விசுவாசியாக மாறியிருக்கும் யூதரல்லாதவர்களுக்கு நாம் தடையாக இருக்கக் கூடாது என்று சொல்லி பழைய ஏற்பாட்டு நூல்களான ஆமோஸ், எரேமியா, உபாகமம், ஏசாயா போன்ற நூல்களில் இருந்து கர்த்தரின் வார்த்தைகளை முன்வைத்து தகுந்த ஆலோசனை வழங்கினார். யாக்கோபின் ஆலோசனைகளை ஏற்று அதன்படி நிருபம் எழுதப்பட்டு எல்லா சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இது திருச்சபையில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்த்து அமைதியும், சமாதானமும் ஏற்பட வழிவகுத்தது. அப்போஸ். 15 இதை விளக்குகிறது.

இந்தப் பிரச்சனை பற்றிய விஷயத்தில் பவுலும், யாக்கோபும் ஒரே மனதுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். யாக்கோபு வழங்கிய ஆலோசனை யூத சுவிசேஷ ஊழியம் பெருக வழிவகுத்தது. அநேக யூதர்கள் இதனால் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். இங்கே மதிப்புக்குரிய சபைத்தலைவராக யாக்கோபிருந்திருப்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம். இதன் காரணமாகவே யாக்கோபு நீதிமான் என்று அழைக்கப்பட்டார். இந்த யாக்கோபே, யாக்கோபு நூலை எழுதியவர். அவருடைய அதிகாரத்தை திருச்சபை அங்கீகரித்திருந்தது. இந்த நிருபத்தை எழுத யாக்கோபுக்கு அதுவே போதுமானதாக இருந்தது. யாக்கோபு மிகவும் தாழ்மையானவர். அவர் வாழ்ந்தவிதத்தைப் போலவே எழுத்தும் இருக்கிறது. யூத கிறிஸ்தவர்கள் விசுவாசத்திற்குரிய வாழ்க்கையை வாழவேண்டும் என்று வலியுறுத்தி தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறார் யாக்கோபு. வாழ முடியாத கிறிஸ்தவம் என்று ஒன்றில்லை என்றும், நடைமுறையில் பயன்தராத எதுவும் மெய்க்கிறிஸ்தவம் அல்ல என்றும் யாக்கோபு அதிகாரத்தோடு எழுதுகிறார்.

யாக்கோபின் மரணத்தைக்குறித்த எந்த உண்மையையும் நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. அதுபற்றி வரலாற்றறிஞர்கள் குறிப்பெழுதியிருக்கிறார்கள். அதில் எல்லாமே மெய்யானதென்று ஏற்றுக்கொள்ளுவது கடினம். கிளெமென்ட்டும் (Clement), யொசீபஸும் (Eusebius) யாக்கோபின் மரணம் பற்றி எழுதியிருக்கிறார்கள். யாக்போபு 94ம் வயதில் மரணமானார். அந்த வயதில் யூதர்கள் அவரை ஒரு பொது இடத்துக்கு அழைத்து வந்து கிறிஸ்துவை நிந்திக்கும்படி வற்புறுத்தினார்கள். என்ன நடந்ததோ தெரியாது, யாக்கோபு ஒரு கட்டடத்தின் ஜன்னல் வழியாக மேலிருந்து விழுந்தார். அப்படி விழுந்தபோது எதிரிகள் அவரை அடித்துக்கொன்றிருக் கிறார்கள். நீதிமானாகிய யாக்கோபு கடைசிவரை தன்னுடைய தேவனாகிய

இயேசு கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருந்து மரித்தார். போதித்ததைப் போலவே வாழ்ந்தும் மரித்தார்.

## நூலைப் பற்றிய பொதுவான தகவல்கள்

இதுவரை யாக்கோபு நூலை எழுதியவரைப் பற்றி ஆராய்ந்தோம். இனி நூலைப் பற்றிய மேலும் விபரங்களை ஆராய்வது அவசியம். இதன் மூலம் யாக்கோபு எதைப்பற்றி இத்தனை விளக்கமாக தன் நூலில் எழுதி யிருக்கிறார், எத்தகைய பிரச்சனைகளுக்கான தீர்வுகளைத் தந்திருக்கிறார் என்பதை நீங்கள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் என் நோக்கம்.

ஏற்கனவே, மார்டின் லூதர் யாக்கோபு நூலின் மேல் பெரும் சந்தேகத்தைக் கொண்டிருந்தார் என்று விளக்கியிருந்தேன். கத்தோலிக் கத்தின் காட்டாட்சியை எதிர்த்து போராடிக் கொண்டிருந்த லூதருக்கு யாக்கோபு, கிரியைகளின் மூலம் விசுவாசத்தை அடையலாம் என்று போதிப்பது போல்பட்டது. ஆனால், அது உண்மையல்ல. யாக்கோபுவைக் கவனமாக வாசிக்கின்ற எவரும் அந்நூல் விசுவாசத்தின் கிரியைகளைப் பற்றிப் பேசுவதை அறிவார்கள். இந்த விஷயத்தில் லூதர் பின்னால் தன் கருத்தை மாற்றிக் கொண்டார்.

வரலாற்றில் வேறு பலரும் யாக்கோபுவைக் குறித்து சந்தேகம் எழுப்பியிருந்தார்கள். சிலர் யாக்கோபு நூலில் சத்தியத்தைப் பற்றிய போதனையே இல்லை என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, இயேசு கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்துவின் பரிகாரப் பலியைப்பற்றியும் கர்த்தரைப்பற்றியும், பரிசுத்த ஆவியைப்பற்றியும், நீதிமானாக்குதலைப் பற்றியும் வேறு பல அவசியமான சத்தியங்களைப்பற்றிய போதனையை யாக்கோபுவில் காணமுடியவில்லை என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். சத்தியப் போதனை இல்லாத நூல் எப்படி நமக்குப் பயனளிக்க முடியும் என்று கேட்கிறார்கள்? இந்தக் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றல்ல. உண்மையில் யாக்கோபு நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைத்தான் ஆணித்தரமாக வலியுறுத்தி எழுதியிருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், யாக்கோபு நூலில் அடியோடு சத்தியத்தைப்பற்றிய விளக்கங்களே இல்லை என்று கூறுவது முழுத்தவறு. நூலை ஆரம்பிக்கும்போதே யாக்கோபு “தேவனுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு” என்று எழுதுகிறார். இங்கே ஆரம்பத்திலேயே யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றி நமக்கு அறிவிப்பதைப் பார்க்கிறோம். இயேசு தன்னுடைய சகோதரனாக இருந்தபோதும், அதைப் பற்றி எழுதாமல் இயேசு கிறிஸ்து திரித்துவை தேவனென்றும், திரித்துவத்தில் அவர் இரண்டாம் அங்கத்தவர் என்றும், அவர் கர்த்தர் என்றும், அவரே பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மேசியா என்பதையும் ஆணித்தரமாக எழுதித் தன் நிருபத்தை ஆரம்பிக்கிறார் யாக்கோபு. இயேசு கிறிஸ்துவைக் கர்த்தர் என்று குறிப்பிடுவதன் மூலம் தான் அவருக்கு தம்பி மட்டுமல்ல அதையெல்லாம்விட மேலாக அவர் எனக்கு ஆண்டவர் என்பதை

யாக்கோபு விளக்குகறார். தான் அவருக்கு அடிமை என்பதை 'ஊழியக் காரன்' என்ற பதம் விளக்குகிறது. இதெல்லாம் இறை சத்தியங்களில்லாமல் வேறென்ன? 1:17ல் எந்த ஈவும் பரத்திலிருந்து வருகிறது என்று விளக்கி பிதாவின் தன்மையைப் பற்றிக்கூறி அவர் என்றும் மாறாதவர் என்று கர்த்தரைப் பற்றிய கர்த்தத்துவத்தை யாக்கோபு விளக்கியிருப்பது சத்திய மல்லாமல் வேறென்ன?

யாக்கோபுவில் சத்திய போதனைகளில்லை என்று சொல்லுகிறவர்கள் 1:21-25 வரையுள்ள வசனங்களில் யாக்கோபு வேத வார்த்தையின் தன்மையைப் பற்றி விளக்குவதை மறந்துவிட்டார்களா? இங்கே வார்த்தை யைப் பற்றிய அவசியமான தெளிவான போதனையை யாக்கோபு வழங்குகிறார். இயேசு கிறிஸ்துவைப்பற்றியும், நியாயப்பிரமாணத்தைப் பற்றியும், ஜெபத்தைப் பற்றியும், பரிசுத்தமாக்குதலைப் பற்றியும் நூல் முழுவதும் யாக்கோபு விளக்கியிருக்க அதில் சத்தியப்போதனை இல்லை என்று சொல்லுவது முழுத்தவறு.

அப்போஸ்தலன் பவுல் அல்லது பேதுரு தங்களுடைய நிருபங்களில் விளக்கியிருப்பதுபோல் யாக்கோபுவின் நிருபத்தில் சத்தியங்கள் ஆழமாக, தெளிவாக விளக்கப்படாமல் இருந்திருக்கலாம். அதற்காக யாக்கோபுவில் சத்தியமே இல்லை என்று சொல்லுவது தவறு. யாக்கோபு பவுலைப் போலவும், பேதுருவைப் போலவும் சத்தியங்களை அணுகாமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் உண்டு. (1) யாக்கோபுவின் ஆரம்ப வாசகர்கள் சத்தியத்தைத் தெளிவாக அறிந்து அதில் ஊறிப்போயிருந்தார்கள். அதாவது, அவர்களுக்கு சத்தியம் நன்றாக விளக்கப்பட்டு, அதில் நல்ல பரிச்சயம் இருந்தது. அது யாக்கோபுவுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர்கள் யாக்கோபுவுக்கு தெரிந்த மனிதர்கள். (2) ஆரம்ப வாசகர்களில் பலர் சத்தியத்திற்கேற்ற வாழ்க்கையை வாழவில்லை. அவர்களுடைய பிரச்சனை சத்தியம் தெரியாமலிருந்ததல்ல; சத்தியத்தின்படி வாழத்தவறியதுதான். அதனால்தான் மறுபடியும் ஒவ்வொரு சத்தியத்தையும் அவர்கள் முன் எடுத்துவைக்காமல் தெரிந்து வைத்திருக்கின்ற சத்தியத்தின்படி ஏன் வாழ மறுக்கிறீர்கள் என்று யாக்கோபு கேட்கிறார்? விசுவாசத்தின்படி வாழா விட்டால் உன் விசுவாசம் செத்த விசுவாசம் என்று ஆணித்தரமாக எழுதுகிறார்.

இதுபற்றி சீர்திருத்தவாத காலத் தலைவர்களில் ஒருவரும், சீர்திருத்த இறையிலர் அறிஞருமான ஜோன் கல்வின் (John Calvin) எழுதும்போது, "ஏற்கனவே மற்றவர்களிடம் இருந்து சத்தியத்தை நன்றாகக் கற்றுக் கொண்டிருக்கிறவர்களுக்கே யாக்கோபு இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார். ஆகவே, அவர்களுக்கு தேவைப்பட்டது சத்தியப்போதனை அல்ல" என்கிறார். யாக்கோபு நூலுக்கு நல்ல விளக்கமளித்துள்ள ஜே. ஏ. மோட்டி யர் (J. A. Mortyer) பின்வருமாறு எழுதுகிறார், "யாக்கோபு சத்தியப் போதனையைக் கொண்டிருக்கவில்லை என்று நாம் சிந்திப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆழமாகக் கவனத்தோடு யாக்கோபு நூலைப் படிக்கும்போது அதில் மாபெரும் அடிப்படை வேத சத்தியங்கள்

அளவில்லாமல் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இரட்சிக்கும் விசுவாசத்தின் தன்மை, பரிசுத்தமாக்குதலுக்கான வழி, வேத வார்த்தையின் தன்மை, நியாயப்பிரமாணத்துக்கும், கிருபைக்குமிடையிலான தொடர்பு போன்ற சத்திய விளக்கங்களைக் காணலாம்" என்கிறார் மோட்டியர்.

தன்னுடைய நிருபத்தில் யாக்கோபு ஒவ்வொரு அதிகாரததிலும் சத்தியத்தின்படி எப்படி வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். சத்தியமில்லாமல் எந்தவொரு நடைமுறைக் கிறிஸ்தவ நடவடிக்கையும் இருக்கமுடியாது. சகல கிறிஸ்தவ நடவடிக்கைகளுக்கும் ஆதாரம் சத்தியமே. சத்தியத்தை ஒதுக்கிவைத்துவிட்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்துவிட முடியாது. அது யாக்கோபுவுக்கு நன்றாகவே தெரியும். சத்தியத்தின்படி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கையாகும். எந்தளவுக்கு சத்தியத்தை அறிந்திருக் கிறோமோ, அந்த அறிவில் வளர்ந்திருக்கிறோமோ அந்தளவுக்கு அதை நடைமுறையில் பயன்படுத்தும்போது நாம் பரிசுத்தத்திலும், கர்த்தரை மகிமைப்படுத்துவதிலும் உயர்கிறோம். சத்தியம் அவசியமில்லாமல் இருந்திருந்தால் இயேசு மலைப்பிரசங்கத்தைக் கொடுத்திருக்க மாட்டார். அதில் அவர் சத்தியத்தையே தெளிவுபடுத்துகிறார்; விளக்கிப் போதித்திருக் கிறார். சத்திய நாயகனான அவர் சத்தியத்தை எப்படி ஒதுக்க முடியும்.

இன்றைக்கு சத்தியத்துக்கு அநேகர் தங்களுடைய வாழ்க்கையில் இடம் கொடுப்பதில்லை. போதகர்களில் இருந்து சாதாரண கிறிஸ்தவன்வரை சத்தியத்தை அறியாமலும், அதை அறிவதில் ஆர்வம் காட்டாமலும் ஒரு பெருங்கூட்டமே கிறிஸ்தவ கூட்டம் என்ற பெயரில் எங்கும் இருந்து வருகிறது. அதுவும் தமிழினத்தில் சத்தியப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. சமீபத்தில் நான் வாசித்த ஒரு தமிழ் கிறிஸ்தவ பத்திரிகையில் ஆராதனையைப்பற்றிய ஓர் ஆக்கத்தை வாசித்தேன். எழுதியவருக்கு ஆராதனைபற்றி வேதம் கொடுக்கும் போதனைகளில் ஆழமான சத்திய ஞானமில்லாதிருந்தது முதல் பக்கத்தை வாசிக்கும்போதே தெரிந்துவிட்டது. இருந்தும் தனக்குத் தெரிந்ததை மட்டும் வைத்துக் கொண்டு இதுதான் ஆராதனை, அதை எப்படி நடத்துவது என்று அவர் தைரியமாக எழுதியிருக்கிறார். சத்தியமறியாத எத்தனையோ பேர் அதை வாசித்து ஆராதனை என்றால் அவ்வளவுதான் என்று நினைத்து வாழ்த்துவிடப் போகிறார்கள். அது மிகவும் வேதனையானது.

இந்தப் பத்திரிகையை நெடுங்காலமாக வாசிப்பவர்களுக்கு ஓர் ஆலோசனை தர விரும்புகிறேன். சத்தியம் எந்தளவுக்கு ஒதுக்கப்பட்டு நம் சமுதாயத்தில் கிறிஸ்தவம் தாழ்வான நிலையிலிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இனியும், இது சரியா? அது சரியா? என்று குழப்ப மான வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கக் கூடாது. சத்தியத்தில் நீங்கள் ஒவ்வொரு நாளும் வளர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாம் வெளியிட்டிருக்கும் 1689 விசுவாச அறிக்கையை வாங்கி அதை ஆராய்ந்து நீங்கள் படிக்க வேண்டும். வாசிப்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் வெளியிட்டிருக்கும் நூல்களை வெறுமனே வாசித்து ஒருபுறம் வைத்துவிடாமல், அதிலிருக்கும் போதனைகள் பற்றி

*மேலும் வேதத்தைப் படித்து ஆராய வேண்டும். அவற்றின்படி நடப்பதற்கான வழிகள் என்ன என்று சிந்திக்க வேண்டும். எந்தளவுக்கு வாசிக்கும் சத்தியங்களின் அடிப்படையில் நடக்கிறேன் என்ற வினாவுக்கு நீங்களே கர்த்தர் முன் பதிலளிக்க வேண்டும். வாசிக்கின்ற சத்தியத்தைப் பற்றி அட்டகாசமாக சிலர் என் முன்னால் பல தடவைகள் பேசிப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், அதன்படி நடக்க ஓர் அடிகூட தைரியத் தோடு முன்வைக்க அவர்களால் இன்றுவரை முடியாமல் இருப்பது எனக்குத் தெரியும்.*

*அத்தோடு குப்பைகளை வாசிப்பதையும் இன்றோடு நிறுத்திவிடுங்கள். நம்முடைய சிந்தனை வேதபூர்வமாக இருக்க வேண்டுமானால் அன்னப் பறவை தண்ணீரை விலக்கி பாலை மட்டும் அருந்துவதுபோல் நாமும் சத்தியத்தை மட்டும் அங்கீகரித்து அதைப் பயன்படுத்திக் கொள்ளும் பக்குவத்தை அடைய வேண்டும். பெந்தகொஸ்தே இயக்கத்தையும், அதன் போலித்தலைவர்களையும் திட்டுகிறவர்கள் எல்லாம் சத்தியமறிந்தவர்கள் என்று எண்ணிவிடக்கூடாது. பாரம்பரிய சபைக்கெதிராகப் பேசுகிறவர்கள் எல்லாம் சத்தியத்துக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. எதையும் சிந்தித்து ஆராய்ந்து வாசியுங்கள். சத்தியத்தின்படி நடப்பது என்பதும் சாதாரண விஷயமல்ல; அதற்கு சத்திய அறிவும், மனுஷ பயமற்ற இருதயமும், எதிர்ப்புக்கு மத்தியில் துணிந்து வாழும் மனப் போக்கும் தேவை.*

### யாக்கோபுவின் எழுத்துநடை

*யாக்கோபுவில் 108 வசனங்கள் இருக்கின்றன. இந்த நூலில் எழுத்து நடையை அதில் காணப்படும் 52 கட்டளைகளையும் வாசிக்கும்போது விளங்கிக்கொள்ள முடிகிறது. இந்தக் கட்டளைகள் மூலம் எழுதியவரின் அதிகாரத்தொனியுள்ள போதனையை உணர முடிகிறது. யாக்கோபுவை வாசிக்கின்றபோது எழுதியிருக்கின்ற எந்த விஷயத்திலும் யாக்கோபுவுக்கு சந்தேகமிருந்ததாகவே தெரியவில்லை. எழுதியிருக்கும் விஷயங்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி எழுதப்பட்டிருக்கின்றன. யாக்கோபு எந்த சத்தியத்துக்காகவும் இந்நூலில் வாதாடுவதை நாம் பார்ப்பதில்லை. அவற்றை நிரூபிக்கும் முயற்சியில் யாக்கோபு ஈடுபடவில்லை. அவை சத்தியம்தான் என்பதை உணர்ந்து அவற்றிற்காக வாதாடாமல், நிரூபிக்க முயலாமல் அவற்றின்படி நாம் நிச்சயம் நடந்தேயாக வேண்டும் என்று வலியுறுத்துகிற தைரியத்தைத்தான் நூலில் பார்க்கிறோம். தான் எழுதி யிருக்கும் எதற்காகவும் யாக்கோபு எங்கும் மன்னிப்புக் கேட்கவில்லை. இப்படி எழுதிவிட்டேன், தயவுசெய்து பொறுமையோடு வாசித்து சிந்தியுங் கள் என்ற வார்த்தைகளையெல்லாம் யாக்கோபுவில் நாம் காண்பதில்லை. தான் எழுதியிருப்பதுதான் சத்தியம், அதற்கு மாறானதொன்றில்லை என்ற வைராக்கியத்தோடு அதே வைராக்கியத்தை வாசிப்பவர்களிடம் எதிர்பார்த்து யாக்கோபு தன் நிருபத்தை எழுதியிருக்கிறார். தான் எழுதியிருப்பதைக் குறித்த கலந்துரையாடலுக்கு யாக்கோபு தயாராக இல்லை. யாக்கோபுவைப் பொறுத்தவரையில் அவற்றைப்பற்றிய கலந்துரையாடலுக்கு இடமேயில்லை. ஏனெனில், அவையே சத்தியம்.*

இந்நூலின் ஆரம்ப வாசகர்களுக்கு எழுதியவரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. யாக்கோபுவின் அதிகாரத்தைப்பற்றியும் அவர்கள் அறிந்திருந்தார்கள். யாக்கோபு யூத இனத்தைச் சார்ந்தவர். அவர் யூதர்களாக இருந்து இயேசுவை விசுவாசித்த கிறிஸ்தவர்களுக்கு இந்த நூலை எழுதியிருக்கிறார். இந்நூலில் யூத வாடை அதிகமாகவே இருப் பதைக் காணலாம்; எபிரெயர் நூலைப்போல. இதனால்தான் யாக்கோபுவை நீதிமொழிகள், பிரசங்கி, யோபு போன்ற நூல்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள் இறையியலறிஞர்கள். இந்நூல்களெல்லாமே 'ஞான இலக்கியங்கள்' (Wisdom Literature) என்று அழைக்கப்படுகின்றன.

யாக்கோபுவின் எழுத்துநடை மிகவும் அருமையானது. யாக்கோபு சுருக்கமான வசனங்களைப் பயன்படுத்துகிறார். அவருடைய வசனங்களும், கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளும் சந்தேகம் ஏற்பட முடியாதபடி தெளிவானவை. அவருடைய வசனங்கள் சுருக்கமானவை மட்டுமல்லாமல் எளிமையானவை. வாசிக்கின்ற ஒருவரையும் ஒருபோதும் குழப்பாது. தான் சொல்ல வருகிற விஷயங்களில் தெளிவும், ஆணித்தரமான நம்பிக்கையும் உள்ளவர்களால்தான் இந்த முறையில் எழுத முடியும். யாக்கோபுவிடம் இருந்து போதகர்களும், பிரசங்கிகளும் கற்றுக் கொள்ள வேண்டியவைகள் அநேகம் இருக்கின்றன.

யாக்கோபுவில் நாம் கவனிக்கும் இன்னுமொரு தவிர்க்கமுடியாத உண்மை அவருடைய பேச்சு நடையும், பயன்படுத்தியுள்ள வார்த்தைகளும், அதிகாரமும் பெருமளவுக்கு இயேசு கிறிஸ்துவின் போதனைகளை ஒத்திருப்பதுதான். இயேசுவைப் போலவே யாக்கோபுவும் தான் சொல்லவருகிற விஷயங்களை விளக்க இயற்கையில் இருந்து அநேக உதாரணங்களைப் பயன்படுத்தியிருக்கிறார். யாக்கோபுவை வாசிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் போதனைகளைக் கேட்பதுபோல் இருப்பதைத் தவிர்க்க முடியாது. யாக்கோபு இயேசுவோடு ஒரே வீட்டில் வாழ்ந்து அவருடைய போதனைகளையெல்லாம் கேட்டு வளர்ந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது. இயேசு கிறிஸ்துவின் பேச்சையும், வார்த்தை களையும் நினைவுபடுத்துகிற 26 வார்த்தைப் பிரயோகங்களை யாக்கோபு வில் நாம் வாசிக்கலாம். யாக்கோபு எந்த இடத்திலும் இயேசு கிறிஸ்து இப்படிச் சொன்னார் என்று சொல்லவில்லை. ஆனால், அவருடைய வார்த்தைகள் அப்படியே இயேசுவின் வார்த்தைகளை ஒத்ததாக இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் இருக்கும் வேறு எந்த நூலும் இந்தளவுக்கு இயேசுவின் போதனைகளை ஒத்திருக்கவில்லை. இருந்தாலும் இயேசுவின் போதனைகளை இந்த 26 வார்த்தைப் பிரயோகங்களும் நமக்கு எல்லா உண்மைகளையும் வெளிப்படுத்திவிடவில்லை. இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தை வாசித்துவிட்டு அதற்குப் பிறகு யாக்கோபுவை வாசித்து இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால் நான் சொல்லுவதன் பொருள் உங்களுக்குப் புரியும். இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கப் போதனைக்கும் யாக்கோபுவின் போதனைக்கும் பெரிய வித்தியாசங்கள் எதுவுமே இல்லை. வார்த்தைப் பிரயோகங்கள் மட்டுமல்லாமல் இயேசுவின் போதனைகளைப் போலவே யாக்கோபுவின் போதனைகளும் அமைந்திருக்

கின்றன. இயேசு சத்தியத்தின்படி எப்படி வாழ்வது என்பதையே மலைப்பிரசங்கத்தில் வலியுறுத்துகிறார். இயேசுவின் போதனைகள் வாழ்க்கைக்குப் பயனில்லாத உயிரற்ற போதனைகளல்ல. வெறும் ஒழுக்கம் சம்பந்தமான போதனைகள் அல்ல. இயேசுவின் போதனைகள் தெளிவானதும், அதிகாரமுள்ளதுமான ஜீவனுக்குரிய போதனைகள். அவை ஒவ்வொன்றையும் விசுவாசிப்பதுமட்டுமல்லாமல் வாழ்க்கையில் நேர்மையாகக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்பதையே மலைப்பிரசங்கத்தில் இயேசு வலியுறுத்துகிறார். பரிசேயர்கள் வெறும் வாய்ச்சவடாலோடு பேச்சில் மட்டும் வீரர்களாக இருந்தார்களே தவிர வாழ்க்கையில் வெறும் குள்ள நரிகள் மட்டுமே. அவர்களுடைய வேஷத்தைக் மலைப்பிரசங்கத்தில் கலைத்துப்போடுகிறார் இயேசு. மெய்யான பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டியதை ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். பரிசேயர்களுடைய நீதியை விட விசுவாசிகளின் நீதி அதிகமாக இல்லாமலிருந்தால் அவர்கள் பரலோகம் போக முடியாது என்று கூறி எந்தளவுக்கு விசுவாசிகளின் நீதி உயர்ந்திருக்க வேண்டு மென்பதை சுட்டிக்காட்டுகிறார். இயேசுவின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகளல்ல; அவருடைய வார்த்தைகளில் ஜீவன் இருக்கிறது. இதையெல்லாம் இயற்கையிலிருந்தும், வாழ்க்கைச் சம்பவங்களிலிருந்தும் உதாரணம் காட்டி நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை மலைப்பிரசங்கத்தில் விளக்குகிறார் இயேசு.

யாக்கோபுவின் போதனை இந்த முறையிலேயே அமைந்திருக்கிறது. யாக்கோபுவைப் வாசிக்கிறபோது இயேசு கிறிஸ்துவின் நினைவு நமக்கு வருகிறது. இயேசுவில் நாம் காணும் அதிகாரம், வல்லமை, உணர்ச்சி அனைத்தையும் யாக்கோபுவில் பார்க்கிறோம். ரொபட்சன் (A. T. Robertson) இது பற்றி எழுதுகிறபோது, "யாக்கோபுவை வாசிக்கிறபோது, மிகச்சிறந்த சிந்தனைவாதியொருவருக்கு பக்கத்திலிருந்து பல்லாண்டு காலம் வாழ்ந்து வளர்ந்து அவரிடமிருந்து கற்று, அவருடைய சிந்தனைகளால் பாதிக்கப் பட்டு உயர்ந்த ஒருவரின் பேச்சைக் கேட்பது போலிருக்கிறது."

உதாரணத்திற்கு வாழ்க்கையில் தீர்மானம் எடுக்கிறபோது விசுவாசத்தைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப்பற்றி யாக்கோபு தரும் போதனையை எடுத்துக்கொள்ளுவோம். நம்முடைய சிந்தனையை ஆண்டு நாம் சரியான தீர்மானங்களை வாழ்க்கையில் எடுக்க உதவும் விசுவாசத்தைப்பற்றி யாக்கோபு விளக்குகிறார். நாம் வாழ்வதற்கு உதவுகின்ற சத்தியத்தைப் பற்றி யாக்கோபு பேசுகிறார். இதை விளக்குகிறபோது யாக்கோபு மிகவும் எளிமையாக விளக்குகிறார். உடனடியாக விஷயத்துக்கு வந்து எந்தவிதக் குழப்பமுமில்லாமல் பிரச்சனை தீருவதற்கான வழிமுறையைக் காட்டுகிறார். உனக்கு என்ன பிரச்சனை அதைச் சொல்லு, நான் தீர்த்து வைக்கிறேன் என்பதுபோல் அவருடைய வழிமுறை இருக்கிறது. விஷயத்தைச் சிக்கலாக்கி, உதவி கேட்டு வருகிறவரின் மனநிம்மதியைக் குலைத்து தலையைச் சுற்றுகிற போதனையைத் தராமல் விஷயத்தைக் துள்ளியமாக உணர்ந்து விளக்கி, அதைத் தீர்ப்பதற்கான தகுந்த வழிமுறைகளை ஆணித்தரமாக போதிக்கிறார் யாக்கோபு. விஷயத்தை ஓரங்கட்டி, மூடி

*மறைத்து அல்லது அலட்சியப்படுத்துகிற வேலையெல்லாம் யாக்கோபு விடம் நாம் பார்ப்பதில்லை. யாக்கோபு தன்னுடைய நிருபத்தின் மூலம் தன்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நமக்கெல்லாம் நினைவு படுத்துகிறார்.*

*யாக்கோபு இயற்கையிலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்துவதைப் பற்றிக் கூறியிருந்தேன். பழைய ஏற்பாட்டில் ஆமோஸ் இதேபோலத்தான் தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார். அவருடைய தீர்க்கதரிசனத்தில் இயற்கையிலிருந்து பல உதாரணங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சமுதாய அநியாயங்களைச் சுட்டிக்காட்ட இயற்கையிலிருந்து உதாரணங்களை ஆமோஸ் பயன்படுத்தியிருக்கிறார். இதனால் யாக்கோபை ஆமோஸோடு தொடர்புபடுத்தி இறையியலறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியினுடைய நேர்மை, நெஞ்சுரம், மனுஷ பயமற்ற தைரியம், சத்தியத்தை சத்தியமாக பேசும் வைராக்கியம் எல்லாவற்றையும் யாக்கோபுவில் பார்க்கலாம். யாக்கோபுவை வாசிக்கும்போது உங்களுக்கு கஷ்டமாக இருக்கும். நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்து கொள்ளுவதே யாக்கோபுவின் நோக்கமாக இருக்கிறது. அவருடைய போதனைகள் உங்களைக் கஷ்டப்படுத்தும். இருந்தாலும் அவை மட்டுமே உங்களுக்கு ஆத்மீக உதவியளிக்க முடியும்.*

*யாக்கோபு தன் நூலில் விளக்குகின்ற சத்தியங்கள் சிலவற்றைக் கவனிப்போம். பாவம் என்றால் என்ன என்பதை பகிரங்கமாக, வெளிப் படையாக யாக்கோபு விளக்குகிறார். அதுபற்றிய எந்தவித மூடிமறைப் புக்கும் யாக்கோபு இடந்தருவதில்லை. அவிசுவாசம் எப்படி உருவாகி வளர்கிறது என்பதை விளக்குகிறார். உபத்திரவங்கள் பொறுமையை நம்மில் எப்படி வளர்க்கின்றன என்பதை யாக்கோபு விபரிப்பதே அருமையானது. ஜெபத்தை நாம் எப்படி வீணாக்கிவிடலாம் என்பதை அவர் விளக்குகிறார். நாம் கேடானவர்களாக எப்படி மாறிவிடலாம் என்பதைத் தயக்க மில்லாமல் தெளிவுபடுத்துகிறார். தன்னலம் நம்முடைய விசுவாசக் குறிக்கோள்களை எந்தவிதத்தில் அசட்டை செய்துவிட காரணமாக அமைந்துவிடும் என்பதைத் தெளிவாக விளக்குகிறார். நம்முடைய கோபம் எவ்வாறு நீதியைத் தொலைத்துவிடும் என்பதையும் அருமையாக விளக்குகிறார். இதையெல்லாம் யாக்கோபு அத்தனைத் தெளிவாக எழுதியிருப்பதற்குக் காரணம் நாம் எத்தகைய விசுவாசிகள் என்பதை இனங்கண்டுகொள்ளத்தான். உயிரற்ற விசுவாசத்தை யாக்கோபுவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அப்படியொரு விசுவாசம் இருக்க முடியாது என்பதில் யாக்கோபுவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. போலிகளோடு வாழ யாக்கோபு விரும்பவில்லை. போலிகளுக்கு கிறிஸ்தவ சபையில் இடங்கொடுக்க அவர் அனுமதிக்கவில்லை. நீ, மெய்யான விசுவாசியானால் அதை உன் வாழ்க்கையில் காட்டு என்பதுதான் யாக்கோபுவின் தெளிவான செய்தி.*

**நூலின் உள்ளடக்கம்**

*யாக்கோபு நூலை வாசிக்கிறபோது சில வேளைகளில் யாக்கோபு உளரல்*

மன்னனோ என்ற எண்ணம் ஏற்படும். ஏனென்றால், யாக்கோபு ஒரு விஷயத்தை ஆரம்பித்து அந்த விஷயத்தை விளக்குகிறபோது அதில் வரும் இன்னொரு விஷயத்தில் கவனம் செலுத்தி அதை விளக்குவதைப் பார்க்கலாம். ஒரு விஷயத்தில் நிலைத்திருக்காமல் மரத்துக்கு மரம் தாவுவதுபோல் ஒன்று மாற்றி இன்னொரு விஷயத்துக்கு யாக்கோபு போவதுபோல் தென்படும். யாக்கோபு விளக்குகிற விஷயங்களும் ஒன்றொடொன்று தொடர்பில்லாமல் இருப்பது போல் இருக்கும். ஆனால், நூலைக் கவனமாக நாம் படித்துப் பார்த்தால் நம் எண்ணங்கள் தவறானவை என்பதை யாக்கோபு நமக்கு புரியவைப்பார். எதில் ஆரம்பித்து எங்கு போய்க்கொண்டிருக்கிறேன் என்பது யாக்கோபுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது. சொல்ல வந்த விஷயத்தை, ஆரம்பித்த விஷயத்தை யாக்கோபு கடைசிவரை மறந்துவிடவில்லை; தவிர்க்கவும் இல்லை.

வில்லியம் ஹென்றிக்சன் (William Hendriksen) இறப்பதற்கு முன் யாக்கோபு பற்றி விளக்கவுரை எழுதவில்லை. அவர் எழுதி முடிக்காத புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு இன்னொருவர் விளக்கவுரை எழுதி ஹென்றிக்சன் வேதவிளக்கவுரைத் தொகுப்பு முடிவுக்கு வந்தது. ஆனால், முழு வேத நூல்களுக்கும் சுருக்கமான விளக்கமளித்த தன்னுடைய இன்னொரு நூலில் (Survey of the Bible) அவர் யாக்கோபு நூல் பற்றிய குறிப்புகளைத் தந்து அந்நூலின் அதிகாரப் பிரிவுகளை விளக்கியிருக்கிறார்.

1. நீடிய பொறுமை (முதலாம் அதிகாரம்) - முதல் மூன்று அதிகாரங்களில் வரும் விஷயம் இங்கே ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

2. நற் கிரியைகள் (இரண்டாம் அதிகாரம்) - வார்த்தையின்படி நடத்தல்.

3. வார்த்தை (மூன்றாம் அதிகாரம்) - நாவைக் கட்டுப்படுத்துதல்.

4. எண்ணங்கள் (நான்காம் அதிகாரம்) - எண்ணங்களிலும், நடத்தையிலும் தாழ்மையோடிருத்தல்.

5. நீடிய பொறுமை (ஐந்தாம் அதிகாரம்) - கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் நீடிய பொறுமையைக் கடைப்பிடித்தல்.

இந்த அதிகாரப் பிரிவுகள் ஏறக்குறைய சரியானவை. அதிகாரத் தலைப்புகளைப் பயன்படுத்தி அவை எங்கு ஆரம்பித்து எங்கு முடிகின்றன என்பதை நாம் கவனத்தோடு வாசித்து குறிப்பெடுக்க வேண்டும். இந்த சுருக்கமான அதிகாரப் பிரிவுகளின் அடிப்படையில் ஹென்றிக்சன் பின்னால் விரிவான அதிகாரப் பிரிவுகளை அமைத்திருக்கிறார்.

## யாருக்கு எழுதப்பட்டது யாக்கோபு?

யாக்கோபுவின் முதல் அதிகாரம் முதலாம் வசனம் ”சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும்” யாக்கோபு இந்நூலை எழுதியிருப்பதாக விளக்குகிறது. யார் இந்த பன்னிரண்டு கோத்திரங்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ளுவது அவசியம். இவர்கள் பாலஸ்தீனிய எல்லைக்கு வெளியில் வேறு நாடுகளில் வாழ்ந்து வந்த யூதக் கிறிஸ்தவர்கள் என்பதே சரியான பதில். அவர்கள் பல தேசங்களில் வாழ நேர்ந்து அங்கே

கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருந்து வர முயன்றார்கள். புதிய ஏற்பாட்டில் ஏழு நூல்களைப் பொதுவான நூல்கள் அல்லது பொதுவான நிருபங்கள் என்று அழைப்பார்கள். இப்படிப் பெயர் கொடுக்கப்பட்டதற்குக் காரணம் இந்நூல்கள் ஒரு குறிப்பிட்ட சபைக்கு எழுதப்படாமல் எல்லா சபை மக்களும் வாசிக்கும்படியாக பொதுவான விதத்தில் எழுதப்பட்டவையாக இருந்தன. ஆனால், யாக்கோபு ஒரு குறிப்பிட்ட மக்களை மனதில் வைத்தே தன் நிருபத்தை எழுதியிருக்கிறார். அந்த மக்கள் ஒரே இடத்தில் வாழ முடியாமல் பல இடங்களில் வாழ்ந்து வந்தார்கள். இந்த யூதக் கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களின் காரணமாக தங்களுடைய நாட்டில் வாழ முடியாமல் பல இடங்களில் சிதறிப்போயிருந்தார்கள். அதனால்தான் ‘சிதறியிருக்கிற’ என்ற வார்த்தையை யாக்கோபு பயன்படுத்தியிருக்கிறார்.

‘சிதறியிருக்கிற’ என்ற இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டோடு தொடர்புடைய ஒரு வார்த்தை. இதை வாசித்த யூதக் கிறிஸ்தவர்கள் உடனடியாக பழைய ஏற்பாட்டை நினைத்துப் பார்த்திராமல் இருக்க முடியாது. அப்படி இந்த வார்த்தை எந்த அர்த்தத்தில் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வது அவசியம். பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை யூதர்கள் மீதான கர்த்தரின் நியாயத்தீர்ப்பை நினைவுபடுத்துவதாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்ற பன்னிரண்டு கோத்திரங்களும் புதிய உடன்படிக்கை காலத்தில் இல்லை. அவை சமாரியாவும், யூதாவும் கர்த்தரால் தண்டிக்கப்பட்டு நாடுகளாக இல்லாமல் போய்விட்டதோடு முடிவுக்கு வந்துவிட்டன. இந்த நியாயத்தீர்ப்புபற்றிய கர்த்தரின் வார்த்தைகளை நாம் உபாகமம் 4:27ல் வாசிக்கலாம், “கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார்; கர்த்தர் உங்களைக் கொண்டுபோய் விடப்போகிற ஜாதிகளிடத்திலே கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள்.” கர்த்தர் தான் சொன்ன வார்த்தையின்படி பன்னிரண்டு கோத்திரத்தாரையும் நியாயந்தீர்த்தார். இவர்கள் கர்த்தரின் வார்த்தையைத் தொடர்ந்து மீறி வந்தார்கள். அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை உதாசீனப்படுத்தினார்கள். கர்த்தர் ஒரு முறை இருமுறையென்றில்லாமல் பல தடவைகள் திருந்தும்படிக் கேட்டும் அவர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை. இறுதியில் கர்த்தர் அவர்களை ஒவ்வொரு முறையும் தன் வார்த்தையின்படி தண்டிக்க நேர்ந்தது. இறுதியாக பிரிக்கப்பட்டிருந்த இரு தேசங்களும் இல்லாமலாக்கப்பட்டன. இதையே உபாகமம் 24:7 நினைவுபடுத்துகிறது. பிரிக்கப்பட்டிருந்த இருநாடுகளின் மீது வந்த தண்டனையை நாம் 2 இராஜாக்கள் நூலில் வாசிக்கிறோம்.

உபாகமம் 24:7 கர்த்தரின் தண்டனையை மட்டும் நினைவுபடுத்தாமல் அவருடைய மகா கிருபையையும், வாக்குத்தத்தத்தையும் நினைவுபடுத்துகிறது. பன்னிரு கோத்திரத்தையும் நியாயந்தீர்த்த கர்த்தர் அவர்களைக் “கொஞ்ச ஜனங்களாய் மீந்திருக்கச் செய்வார்” என்கிறது இவ்வசனம். அத்தோடு எரேமியா 31:10 கர்த்தரின் வாக்குத்தத்தத்தை விபரமாக விளக்குகிறது. “ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலை சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்

வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்." இதுவே அந்த வாக்குத் தத்தம். இது மக்களுக்கு மிகுந்த ஆறுதல் அளிப்பதாக இருந்தது. அவர்கள் கர்த்தரை மீறி வாழ்ந்தார்கள். பாவத்திற்காக தண்டிக்கப்பட்டார் கள். இருந்தபோதும் அவர்கள் எப்போதுமே சிதறிப்போய் வாழப்போவ தில்லை. மனந்திரும்பி அவர்கள் கர்த்தரிடம் வந்தால் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார். தன்னுடைய மேய்ப்பனின் கீழ் அவர்களை ஒன்றுகூட்டி ஒரே மக்களாக கர்த்தர் வாழச் செய்வார். இந்த வாக்குத் தத்தத்தைக் கர்த்தர் அவர்களுக்கு அளித்திருந்தார். யோவான் 11:52ல் பன்னிரு கோத்திரத்தாரான யூதர்களுக்கு கர்த்தர் காய்பா என்ற பிரதான ஆசாரியா னின் மூலம் ஒரு வாக்குத் தத்தத்தைக் கொடுக்கிறார். "அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்." இந்த இடத்தில் நாம் சிதறிப்போயிருக்கிற பழைய ஏற்பாட்டுப் பன்னிரு கோத்திரத்தை மனதில் வைத்து இந்த வாக்குத் தத்தம் கொடுக்கப்படவில்லை. "சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகள்" என்ற பதங்கள் ஆத்மீக இஸ்ரவேலரைக் குறிக்கிறது. பன்னிரு கோத்திரங் களும் மறுபடியும் கூடி வர முடியாது. இன்றைக்கு பன்னிரு கோத்திரம் என்பது ஆத்மீகக் கருத்தை உள்ளடக்கி தேவனுடைய மக்களாகிய யூதர் களையும், புறஜாதியாரையும் குறிப்பதாக இருக்கின்றது. உலகமெங்கும் சிதறிக் காணப்படுகின்ற தன்னையறியாத யூதர்களையும், புறஜாதியாரையும் சுவிசேஷத்தின் மூலம் கரை சேர்த்து இயேசுவின் தலைமையில் கர்த்தர் ஒன்று சேர்க்கப்போகிறார். இதுவே அந்த வாக்குத் தத்தம்.

யாக்கோபு 1:1ல் விளக்கியிருக்கிற "சிதறியிருக்கின்ற பன்னிரண்டு கோத்திரங்கள்" யார் என்பதை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இதை விளங்கிக்கொள்ள அப்போஸ்தலனாகிய பவுலும் நமக்கு உதவி செய்கிறார். கலாத்தியர் 6:15-16 வசனங்களில் பவுல் சொல்லுவதைக் கேளுங்கள், "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர் களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக." இங்கே பவுல் விருத்தசேதனம் என்று குறிப்பிடுவது யூதர்களை மனதில் வைத்தே. யூதர்களாயிருப்பதும், யூதர்கள் அல்லாதவர்களாயிருப்பதிலும் ஒன்றுமில்லை, நீங்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறீர்களா? அப்படியிருந்தால் மட்டுமே உங்களுக்கு கர்த்தரின் சமாதானமும், இரக்கமும் கிட்டும் என்கிறார் பவுல். அத்தோடு அத்தகையவர்களே "தேவனுடைய இஸ்ரவேலர்கள்" என்று விசுவாசிகளை அவர் அடையாளப்படுத்திக் காட்டுகிறார். பன்னிரு கோத்திரங்களும் இன்று இல்லை. இன்றைக்கு ஆத்மீக ரீதியில் பன்னிரு கோத்திரங்களாகவும், இஸ்ரவேலர்களாகவும் வேதம் அடையாளம் காட்டுவது கிறிஸ்தவ விசுவாசிகளையே.

யூதர்களையும், புறஜாதியர்களையும் கிறிஸ்துவுக்குள் இணைத்து ஒரு புதிய தேவ சமுதாயத்தைக் கர்த்தர் கட்டியெழுப்புவதை ரோமர் 9:6-8

*வரையுள்ள வசனங்களில் பவுல் விளக்குகிறார். "தேவ வசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால் இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா னாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின் படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத் தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார் கள்." இதன்படி யூதனாக இருப்பதால் மட்டும் ஒருவன் தேவனுடைய பிள்ளையாகிவிடுவததில்லை; அவன் கிறிஸ்துவின் பிள்ளையாக இருக்க வேண்டும் என்றும், கர்த்தர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற அனைவருக்கும் சொந்தமானது என்பதையும் பவுல் தெளிவாக விளக்குகிறார்.*

*ரோமர் 9ல் பவுல் விளக்கும் இந்த சத்தியம் வரலாற்றில் நிறைவேறியது. அதை நாம் அப்போஸ்தலருடைய நடபடிகளில் வாசிக்கிறோம். ஸ்தேவான் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்ட பிறகு எருசலேமில் கிறிஸ்தவர் களுக்கு உபத்திரவங்கள் ஆரம்பித்து அப்போஸ்தலர்களைத் தவிர கிறிஸ்தவர்கள் வேறு நாடுகளுக்குப் போய் வாழ வேண்டிய நிலை ஏற்பட் டது. அப்படிப் போனவர்கள் போன இடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். யூதர்கள், புறஜாதியார் என்ற பாகுபாடின்றி எல்லாருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக விசுவாசிகள் கூட்டம் பெருகி திருச்சபைகள் எல்லா இடங்களிலும் நிறுவப்பட்டன. ஆத்மீக இஸ்ரவேலர்கள் அதாவது தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் திருச்சபைகளில் இணைந்து வாழ்ந்தனர். இந்த ஆத்மீக இஸ்ரவேலர்களே (விசுவாசிகள்) இப்போது உபத்திரவத்தின் காரணமாக சிதறிப்போய்ப் பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கே யாக்கோபு தன்னுடைய நிருபத்தை எழுதினார். அவர்களையே 1:1ல் "சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்கள்" என்று குறிப்பிடுகிறார்.*

## யாக்கோபு எழுதப்பட்ட காலம்

*யாக்கோபு கி. பி 45-60 வரையுள்ள காலப்பகுதிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும். யாக்கோபு தலைமை வகித்திருந்த எருசலேம் கவுன்ஸிலைப் பற்றி நாம் இந்த நூலில் எங்குமே வாசிப்பதில்லை. ஆகவே, கவுன்ஸில் நடப்பதற்கு முன்பு நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். கி. பி 50களில் அல்லது 50களின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ விசுவாசிகள் உபத்திரவங்களை அனுபவிக்க ஆரம்பித்திருக்க வேண்டும். அதன் காரணமாக யாக்கோபு இந்த நிருபத்தை எழுதி அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார். இதனால், புதிய ஏற்பாட்டு நூல்களில் முதலாவதாக எழுதப்பட்ட நூல்கள் என்ற வரிசையில் யாக்கோபு, மாற்கு சுவிசேஷத்தோடு சேர்த்து கணிக்கப்படுகிறது.*

*மத்தேயு ஹென்றி* (Matthew Henry) *யாக்கோபு பற்றிக் குறிப்பிடும்போது, "விசுவாசத்திலும், விசுவாச நடவடிக்கைகளிலும் மிகவும் பின்வாங்கிப் போயிருந்தவர்களைக் கண்டிக்குமுகமாக யாக்கோபு இந்த நூலை எழுதி*

*யிருக்கிறார்" என்கிறார். பல நாடுகளிலும் சிதறிப்போய் வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகள் பல உபத்திரவங்களை வாழ்க்கையில் சந்தித் திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் விசுவாசத்தில் பின்தங்கி யிருக்கிறார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டிக்கிறார். அவர்களுக்கு கிறிஸ்தவ சத்தியம் நன்றாகத் தெரிந்திருந்தது. பலரிடமும் இருந்து அவற்றைக்கேட்டு வளர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அறியாமையில் வாழவில்லை. ஆனால், சத்தியத்தின்படி அவர்கள் வாழத்தவறியிருக் கிறார்கள். அவர்களுடைய பக்திவிருத்தி குறைந்திருக்கிறது. இவர்கள் விசுவாசிகள்தானா? என்று கேட்கும்படி சிலருடைய வாழ்க்கை அமைந் திருக்கிறது. நீங்கள் விசுவாசிகளாக இருந்தால் உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகள் வாழ்க்கையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள் என்று கண்டித்து எழுதுகிறார் யாக்கோபு.*

## நூலைப் பற்றிய கடைசி வார்த்தைகள்

*இதுவரை யாக்கோபு நிருபத்தின் ஆசிரியர், அவருடைய எழுத்து நடை, நூலின் உள்ளடக்கம், எழுதப்பட்ட காலம் என்று நூல்பற்றிய விபரங்களைப் பார்த்து வந்தோம். இனி இந்த நூல் பற்றிய என்னுடைய தனிப்பட்ட கருத்துக்களை பயன்பாடாக உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.*

### 1. யாக்கோபுவைப் படித்துப் பயனடைய வேண்டுமானால் நம் வாழ்க்கையில் கணப்படும் சகல போலித்தனத்தையும் அடியோடு கலைந்துபோடவேண்டும்.

*இந்த நூலின் கருப்பொருளே "நேர்மை" என்றுதான் கூற வேண்டும். நீங்கள் யார் என்று உங்களை அறிவிக்கிறீர்களோ அப்படியே நடந்து கொள்ளுங்கள் என்கிறார் யாக்கோபு. போலித்தனம் உங்கள் வாழ்க்கையில் இருக்கக் கூடாது என்கிறார் யாக்கோபு. இந்த நூல் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை நடைமுறை வாழ்க்கை நடவடிக்கைகளைப்பற்றியே பேசுகிறது. நீங்கள் கிறிஸ்தவராக உங்களை அறிவித்துக்கொண்டால் உங்களுடைய கிறிஸ்தவம் ஏன் வாழ்க்கையில் இல்லை என்று குத்திக் காட்டிக் கேட்கிறார் யாக்கோபு. யாக்கோபுவை வாசிக்கிற பலர் இந்த உண்மையைக் கவனிக்கத் தவறிவிடலாம். ஏனெனில், யாக்கோபு பெரிதாக தலையைக் குழப்புகிற இறையியல் போதனைகளையெல்லாம் தராமல் மிகவும் எளிதான, அதேநேரம் அத்தியாவசியமான பேருண்மையைத் தோலுரித்து வைக்கிறார்: எங்கே உன் கிறிஸ்தவம்? என்று ஆணித்தரமாகக் கேட்கிறார்.*

*இதன் ஆரம்ப வாசகர்கள் கர்த்தரின் வேதத்தை நன்கு கற்றிருந்தார்கள். வேத சத்தியங்களை நன்கு அறிந்திருந்தார்கள். சத்தியப் பஞ்சம் அவர்களுடைய வாழ்க்கையில் இருக்கவில்லை. ஆனால், அத்தனை வேத ஞானம் இருந்த இடத்தில் அது நடைமுறையில் அவர்களுடைய வாழ்க்கையில் காணமுடியவில்லை. அதை யாக்கோபுவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வேத ஞானம் அழகு பார்ப்பதற்காகவோ அல்லது தர்க்கம் செய்வதற்காகவோ கொடுக்கப்படவில்லை. அது நடைமுறையில் வாழ்க்கையில் இருக்க வேண்டும். வெறுமனே "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்"*

என்று வாய் நிறைய ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருப்பதைவிட உன் வாழ்க்கை கர்த்தர் மனமகிழ்ச்சியடையும்படி இருக்குமாறு பார்த்துக் கொள் என்கிறார் யாக்கோபு. இறையியல் அறிஞர் லென்ஸ்கி (Lenski) சொல்லுகிறார், "இந்த நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றியது. விசுவாசம் எந்தவகையில் உண்மையானதாக, ஜீவனுள்ளதாக, பலனளிப்பதாக, நடைமுறையில் காணக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது." அதுதான் மெய் விசுவாசம். வெறும் பாட்டும், ஆட்டமும், கூத்தும் அது இருப்பதற்கு அடையாளமல்ல. பரிசேயர்களுக்கு இருந்ததைப் போன்ற வாழ்க்கைக்குப் பிரயோஜனமில்லாத ஞானமும் அது இருப்பதற்கு அடையாளமல்ல. மெய்யான கிறிஸ்துவின் சத்தியங்கள் அத்தனையும் வாழ்க்கையில் வைராக்கியத்தோடு நடைமுறையில் இருப்பதே மெய் விசுவாசத்துக்கு அடையாளம். அது இருக்குமிடத்தில் வேத தாகம் இருக்கும். பரிசுத்த வாழ்க்கை எரிநெருப்பாக எரியும். சகோதர அன்பு வார்த்தையோடு மட்டும் நின்றுவிடாது. மொத்தத்தில் போலித்தனத்திற்கு அங்கு இடமே இருக்காது.

நீ கிறிஸ்தவனாக இருந்தால் உபத்திரவத்தின் மத்தியில் ஆனந்தத்தோடு வாழ்ந்து அந்த உபத்திரவத்தின் மூலம் கர்த்தர் உன்னில் நடத்துகிற காரியங்களின் விளைவுகள் நிறைவேற இடங்கொடு என்கிறார் யாக்கோபு. உபத்திரவம் ஏற்படும்போது தலையைப் பிய்த்துக்கொண்டு எந்தக் கிறிஸ்தவப் போதகனாவது ஜெபித்து ஆறுதல் தரமாட்டானா என்று அலையாதே என்கிறார் யாக்கோபு. வேதவார்த்தையைக் கேட்பதோடிருந்துவிடாமல் அதன்படி நடப்பதைக் கடமையாகக்கொள் என்கிறார். வேத வார்த்தைகள் பார்த்து இரசிப்பதற்கோ அல்லது கேட்டுவிட்டு சும்மா இருப்பதற்கோ தரப்படவில்லை; நாம் அன்றாடம் கேட்டு நடப்பதற்கு என்கிறார் யாக்கோபு. விதவைகளுக்கு அன்பு காட்டி அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றாதவன் கிறிஸ்தவனா? என்கிறார் யாக்கோபு. ஆத்திரம் வருந்தான்; மனிதனாக இருந்தால் ஆத்திரம் வரும். ஆனால், கிறிஸ்தவன் வெறும் மனிதனல்ல, மனந்திரும்பிய மனிதன். தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிற மனிதன். ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தி விசுவாசிபோல் நடக்காமல் சிந்தனையும், பேச்சும் பிசாசுத்தனமாக இருக்குமானால் உன் விசுவாசம் செத்த விசுவாசம் என்கிறார் யாக்கோபு. நாவடக்கத்தைப் பற்றி யாக்கோபு தெளிவாக விளக்குகிறார். நாவைக் காக்காதவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்கிறார். "அவதூறு சொல்லாதே" என்று ஓர் ஆக்கத்தை மலர் 13 இதழ் 4 ல் எழுதியிருந்தேன். அதை வாசியுங்கள். நாவைக் காக்காதவன் நிச்சயம் கிறிஸ்தவனாக இருக்க முடியாது, அவன் பிசாசின் கையாள் என்கிறார் யாக்கோபு. இன்னும் எத்தனையோ நடைமுறை வாழ்க்கையில் இருக்க வேண்டிய விசுவாசக் குணாதிசயங்களை யாக்கோபு விளக்குவதற்குக் காரணம் போலித்தனம் நம்மில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான். யாக்கோபுவை வாசித்தும் மாறாத வாழ்க்கை மெய்விசுவாசத்தைக் கொண்டதாக இருக்க முடியாது. அதை வாசித்துப் பதறாத இருதயத்துக்கு மனந்திரும்புதலின் அர்த்தம் தெரியாது. அதை வாசித்துக் கலங்காத

*இருதயம் பரிசுத்தத்தில் அக்கறை காட்டி வாழ முயற்சிக்காது. வாசியுங்கள் யாக்கோபுவை. கர்த்தரே உங்களோடு பேசட்டும்.*

---






மதிப்புக்குரிய பாஸ்டர் அவர்களுக்கு, தாங்கள் வெளியிடும் புத்தகங்களையும் குறிப்பாக திருமறைத்தீபத்தை 2004ம் ஆண்டில் இருந்து படித்து வருகிறேன். திருமறைத்தீபத்தை தொடர்ந்து படிப்பதால் கிறிஸ்துவுக்குள் வளரவும், வேதபோதனைகளைத் தெளிவாக அறிந்துகொள்ளவும் முடிகிறது. அருமையான இந்த புத்தகத்தை தாங்கள் வெளியிட்ட முதல் பிரதியிலிருந்து படிக்க விரும்புகிறேன். நான் தொடர்ந்து படித்து கிறிஸ்தவ விசுவாசத்துக்குள் வளர அது உதவுமாதலால் தயவுசெய்து அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

***– டி. அன்னப் பேச்சி, தமிழ்நாடு***



உங்கள் பத்திரிகையை கடந்த சில வருடங்களாக அனுப்பித் தருகிறீர்கள். அவை மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியனவாக இருக்கின்றன. கர்த்தரைத் துதித்து என் நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தயவு செய்து அனைத்துப் பழைய இதழ்களையும் அனுப்பித் தரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். என் முகவரி மாற்றப் பட்டுள்ளது. அதையும் குறித்துக் கொள்ளுங்கள்.

***– டீ. தங்கசாமி, தமிழ்நாடு (இந்த சகோதருக்கு 82 வயதாகிறது. இந்த வயதிலும் கர்த்தரின் சத்தியத்தில வளருவதில் ஆர்வமாயிருக்கிறார். இவருடைய சரீர மற்றும் ஆத்மீகத் தேவைகளுக்காக வாசகர்கள் ஜெபித்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.***



கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வேதத்தின் கருத்துக்களை தெளிவாக விளக்கி சாதாரான நபர்களை கிறிஸ்துவில் வளரச் செய்கிற திருமறைத்தீபத் தொகுப்புகள் மிக அருமையானது. தற்செயலாக பத்திரிகை கையில் கிடைத்து வாசிக்க முடிந்தது. என் வாழ்க்கை எனும் கடலில் உடன்படிக்கை பெட்டி எவ்வளவு மேலானது என்று உணர்ந்து கிறிஸ்துவில் வளர பிரயோஜனமாக உள்ளது. எனக்கும் புதிய இதழ்களையும், பழைய இதழ் களையும் தயவு செய்து அனுப்பி வைப்பீர்களா? பத்துக்கட்டளை போதனை நூலையும் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

***– ஏ. சொலமன் சகாயராஜன், தமிழ்நாடு***

***[வாசகர்கள் நமது வெளியீடுகளை பின் அட்டையின் உட்புறத்தில் தரப்பட்டிருக்கும் மதுரை முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் – ஆர்]***

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி 107**: தன்னுடைய மக்கள் ஜெபிப்பதற்கு வழிகாட்டியாக அமையும்படி கர்த்தர் எத்தகைய விதியைத் தந்திருக்கிறார்?*

***பதில்**: கர்த்தரின் முழு வேதமுமே அவருடைய மக்களை ஜெபத்தில் வழிகாட்ட உதவி செய்தபோதும், கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்றுத்தந்ததும், பொதுவாக 'கர்த்தருடைய ஜெபம்' என்று அழைக்கப்படுகிறதுமான ஜெபமே கர்த்தருடைய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பான ஜெபவழிகாட்டி விதியாக இருக்கிறது.*

*(1 யோவான் 5:14; மத்தேயு 6:9–13; லூக்கா 11:2–4).*

**விளக்கக் குறிப்பு:**

**நீதிமான்களின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்கிறார்**

*இயேசுவின் சீடர்கள் அவரிடத்தில் வந்து, "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும்" (லூக்கா 11:1) என்று கேட்டபோது இயேசு அவர்களுக்கு எப்படி ஜெபம் செய்வது என்று விளக்கினார். இந்த ஜெபத்தை "கர்த்தருடைய ஜெபம்" என்று பொதுவாகக் கூறுவார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டியவிதமாவது" என்று ஆரம்பித்து எப்படி ஜெபிப்பது என்று விளக்கினார் (மத்தேயு 6:9). இதன் மூலம் இயேசு அவர்களுக்கு ஒரு மாதிரி ஜெபத்தை சொல்லித் தந்திருப்பதை அறிந்து கொள்ளுகிறோம். அதாவது, இந்த ஜெபத்தை ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்பச் சொல்லுவதற்காக இயேசு இதைத் தரவில்லை. இயேசு போதித்த இந்த ஜெப வார்த்தைகளை உள்ளவாறே திரும்பத் திரும்பச் சொல்வதால் எந்தப் பயனும் கிடைக்காது. சிலர் விஷயம் தெரியாமல் இதை ஒரு மாயாஜால ஜெபத்தைப் போலப் பயன்படுத்துகிறார்கள். ஏற்கனவே, இந்த மத்தேயு பகுதியில் இயேசு பரிசேயர்களை உதாரணம் காட்டி, "நீங்கள் ஜெபம் செய்யும்போது அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதீர்கள்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். இயேசு சொல்லித் தந்திருக்கிற ஜெபத்தை திரும்பத் திரும்பச் சொல்லுவது அஞ்ஞானிகளைப் போல அலப்புவதற்கு ஒப்பானதாகும்.*

*இயேசு தான் சொல்லிக் கொடுத்திருக்கும் ஜெபத்திலுள்ள வார்த்தைகளையும், கருத்துக்களையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இந்த ஜெபம் ஒரு மாதிரி ஜெபம். கடையில் நாம் பழம் வாங்கப் போகிறபோது பழக்கடைக்காரன் நமக்குப் பழம் நல்ல பழம்தான் என்று நிரூபிப்பதற்காக பழத்துண்டை சாம்பிளாகத் தருவதில்லையா? அந்தத் துண்டு சாம்பிள் பழம் எப்படி ருசியாயிருக்கிறதோ அதேபோல வாங்கப் போகிற முழுப்பழமும் இருக்கும். சாம்பிளே நாம் வாங்கப் போகிற*

பழமாகிவிடாது. அதுபோல ஒரு மாதிரிதான் இயேசு சொல்லித்தந்த ஜெபமும். அதையே நாம் அன்றாடம் செய்யவேண்டிய ஜெபமாகக் கருதி விடக்கூடாது. இந்த மாதிரி ஜெபத்தை வைத்துக் கொண்டு நம்முடைய ஜெபங்களை நாம் தயாரித்துக்கொள்ள வேண்டும். இந்த மாதிரி ஜெபத்தில் என்னென்ன விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் சிந்தித்து ஆராய்ந்து பார்த்து இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு நம்முடைய ஜெபங்களை கர்த்தருக்கு முன் ஏறெடுக்கவேண்டும்.

**மெய்யான ஜெபத்தின் அடிப்படை அம்சம்**

மெய்யான ஜெபம் எப்போதும் கர்த்தரை முதன்மைப்படுத்துவதாக இருக்கும். கர்த்தர் மனிதனைப் படைத்திருப்பதே அவன் தன்னை அனைத்திலும் மகிமைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான். எனவே, ஜெபத்திலும் கர்த்தரே மகிமையடைய வேண்டும். பத்துக்கட்டளைகள் கர்த்தர் யார் என்பதை நமக்கு விளக்குவதோடேயே ஆரம்பமாகிறது. முதல் மூன்று கட்டளைகளும் அவரைப்பற்றி விளக்கி நான்காவது கட்டளை அவருடைய ஆராதனை நாளைப்பற்றி விளக்குகிறது. நம்மைப் படைத்த கர்த்தரை முதன்மையாகக் கொண்டே நாம் எல்லாவற்றையும் கொண்டு நடத்த வேண்டும்.

இந்த ஜெபத்திலும் இயேசு கர்த்தரை முதன்மைப்படுத்தியே மாதிரி ஜெபத்தை ஆரம்பிக்கிறார். அதற்குப் பிறகு கர்த்தருடைய இராஜ்யத்திற்காகவும், கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்காகவும் ஜெபிக்கும்படி சொல்லுகிறார். அதற்குப் பிறகே நம்முடைய தேவைகள் ஜெபத்தில் இடம் பெறுகின்றன. இறுதியில் மறுபடியும் கர்த்தரை மகிமைப்படுத்துவதோடு ஜெபம் முடிவு பெறுகிறது. உண்மையில் மனிதனின் இயற்கையான சிந்தனைகளுக்கெல்லாம் எதிராக இந்த மாதிரி ஜெபம் அமைந்திருக்கிறது. மனிதன் எப்போதும் தன்னுடைய நலத்திற்கே முதலிடம் கொடுப்பான். அவனால் இயற்கையாக கர்த்தருக்கு முதலிடம் கொடுக்க மனம் வராது. கிறிஸ்தவர்கள் அவ்வாறிருக்கக்கூடாது. இருந்தபோதும், கிறிஸ்தவர்களும் தவறு செய்துவிடுவதுண்டு. தங்களுடைய தேவைகளுக்கு முதலிடம் கொடுத்துவிடுவதுண்டு. அதனால்தான் இயேசு தன்னுடைய சீஷர்களைப் பார்த்து என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள் என்றார். ஆவி இடங் கொடுத்தாலும் மாம்சம் பலவீனமானது. நம்மிலிருக்கும் எஞ்சிய பாவம் தொல்லைகொடுத்து கர்த்தருக்கு நாம் மகிமையளிப்பதற்கு இடையூறாக இருந்துவிடலாம். பாவத்தோடு தொடர்ந்து போராட வேண்டிய கடமையைக் கொண்டிருக்கிற நாம் நம்முடைய மாம்சத்துக்கு இடங்கொடுத்து விடக்கூடாது. இயேசுவின் சீடர்களால் விழித்திருந்து அவரோடு சேர்ந்து ஒரு மணிநேரம் ஜெபிக்க மாம்சம் இடமளிக்கவில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்கள்கூட தேவை என்று வருகிறபோதே அதிகம் ஜெபித்திருக்கிறார்கள். இஸ்ரவேலரை அழிக்க வேண்டாம் என்று மோசே ஜெபித்தார். அன்னாள் தனக்கு ஒரு மகன் வேண்டும் என்று ஜெபித்தாள் (1 சாமுவேல் 1). வேதம் நாம் சூழ்நிலையால் தூண்டப்படும்வரை இருந்துவிடாமல் எப்போதும் ஜெபிக்கும்படி போதிக்கிறது. அதுமட்டுமல்லாமல் இடைவிடாமல் ஜெபிக்கும்படி சொல்லுகிறது. ஜெபத்தைப் பற்றிய அநேக

போலிப்போதனைகள் இன்றைக்கு உலவி வருகின்றன. ஜெபத்தை இலகு வாக செய்துவிடலாம் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. வாழ்க்கையில் நாம் செய்யும் எத்தனையோ காரியங்களை நாம் நினைத்தும் பார்ப்ப தில்லை. அன்றாடம் சுவாசிக்கிறோம், உறங்குகிறோம், பல்துளக்குகிறோம். இதையெல்லாம் இருந்து எண்ணிப் பார்க்காமல் செய்துவிடுவோம். அந்த முறையில் நாம் ஜெபம் செய்துவிடுவதில்லை. ஜெபத்தில் மெய்வீரர்களாக இருப்பவர்கள் தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பயிற்சி செய் திருப்பதால்தான் அவர்களால் ஜெப வீரர்களாக முடிந்திருக்கிறது. ஆகவே, ஜெபத்தை நாம் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. ஏனைய எத்த னையோ விஷயங்களைப்போல ஜெபத்தைப் பற்றியும் நாம் அதிகம் சிந்தி த்து, மனத்தை வருத்தி முயற்சிகள் எடுத்தே தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

### மாதிரி ஜெபத்தின் சிறப்பான அம்சங்கள்

(1) இந்த மாதிரி ஜெபத்தை ஆராய்ந்து பார்த்தால் முதலில் நம் மனதைத் தொடுவது அதன் எளிமைதான். இயேசு பயன்படுத்தியிருக்கின்ற வார்த்தை கள் நம்மை அதிசயிக்க வைக்கும் இலக்கியத் தரம் வாய்ந்தவையல்ல. பெரிய வார்த்தைகளைத் தேடி அவர் இந்த ஜெபத்தைத் தயாரித்து நமக் களிக்கவில்லை. அவர் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளும், சொற்பிர யோகங்களும் மிகவும் எளிமையானவை. ஜெபிக்கும்போது சிலர் பயன்படுத் தும் வார்த்தைகளும், வசன நடைகளும், சொற்பிரயோகங்களும் நம்மை ஆச்சரியப்பட வைக்கும். அவர்கள் குரலும், வார்த்தைகளைப் பயன் படுத்தும் விதமும் நடிகர்களை நமக்கு ஞாபகமூட்டும். கேக் மேல் 'ஐசிங்' வைப்பதுபோல் சிலர் தங்களுடைய ஜெபங்களில் வார்த்தை ஜாலத்தைக் கொட்டுவார்கள்; குரலால் நம்மை மயங்க வைப்பார்கள். இயேசுவின் மாதிரி ஜெபத்தில் அதற்கெல்லாம் எந்த இடமும் கிடையாது. இந்த மாதிரி ஜெபம் மிகவும் எளிமையான வார்த்தைகளைக் கொண்டிருக்கிறது. அதற் குக்காரணம் கர்த்தர் நம்முடைய வார்த்தை ஜாலத்தைவிட உள்ளத்தில் இருந்து வெளிப்படும் எண்ணங்களை நாம் எளிமையாக, உண்மையோடு ஜெபத்தில் வெளிப்படுத்துவதைத்தான் விரும்புகிறார்.

(2) அதன் சுருக்கம் நம்மை சிந்திக்க வைக்கிறது. ஒவ்வொரு ஜெபத் தேவையும் மிகச் சுருக்கமான வார்த்தைகளைக் கொண்டிருக்கின்றன. பத்துக்கும் குறைவான வார்த்தைகளையே ஒவ்வொன்றிலும் பார்க்கிறோம். சிறு குழந்தைகூட இந்த மாதிரி ஜெபத்தை மனப்பாடம் செய்துவிடு மளவுக்கு சுருக்கமானதாக இருக்கிறது. நீண்டதாக இருந்தால்தான் ஜெபத்திற்கு மதிப்பிருக்கும் என்பதுபோல் எத்தனையோ பேர் நீண்ட ஜெபங்களைச் செய்வார்கள். பரிசேயர்களுடைய நீண்ட ஜெபங்களை இயேசு குறை கூறியிருக்கிறார் (மத்தேயு 6:7). இயேசு போதித்த மாதிரி ஜெபத்தின் அடிப்படையிலேயே வேதத்தில் காணப்படும் அத்தனை ஜெபங்களும் இருக்கின்றன. அவற்றைப் படித்துப்பார்த்தால் அவற்றில் எதுவுமே நீண்டதாக, அநாவசியத்துக்கும் வார்த்தைகளை அளவில்லாமல் கொண்டவையாக இருக்காது.

(3) இந்த ஜெபம் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறதை நாம்

*கவனிக்கிறோம். அதாவது, ஜெபத்தில் இருக்கவேண்டிய அனைத்தையும் இந்த மாதிரி ஜெபத்தில் பார்க்கிறோம். ஒரு சில அம்சங்களை மட்டும் அதிக வார்த்தைகளால் விளக்க முனையாமல், அநேக அம்சங்களை குறுகிய வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்த ஜெபத்தில் விளக்கி யிருக்கிறார் இயேசு கிறிஸ்து. இந்த மாதிரி ஜெபத்தைப் பயன்படுத்தி ஜெபத்தில் இருக்க வேண்டிய அத்தனை விஷயங்களையும் எக்காலத் துக்கும் நம்மால் ஜெபிக்க முடியும். இதை வாசித்து கவனமாக சிந்தித்துப் பார்த்தீர்களானால் இதில் இயேசு எந்த அம்சத்தையும் விட்டுவைக்க வில்லை என்பதை உணரலாம். பரலோகத்திலிருந்து இந்த உலகம்வரை அத்தனையும் இந்த ஜெபத்தில் இணைக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த மாதிரி ஜெபத்தில் நாம் சேர்க்கக்கூடியதுபோல் எதுவுமே இல்லை. கர்த்தரின் பத்துக்கட்டளைகளில் நம்முடைய கடமை கள் அத்தனையும் கவனமாகத் தொகுத்தளிக்கப்பட்டிருப்பதுபோல் இந்த மாதிரி ஜெபத்தில் இயேசு நம்முடைய ஜெப வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தந்திருக்கிறார்.*

*இயேசு நமக்குத் தந்திருக்கும் மாதிரி ஜெபம் மனிதர்கள் முன் போலித்தனமாக ஜெபிப்பதற்கு வழிவகுக்கும் அனைத்திற்கும் இடமில்லா மல் செய்துவிடுகிறது. ஜெபத்தை நடிப்பாக்கிவிடுவது மிக சுலபம். அதைத் தான் பரிசேயர்கள் செய்து வந்தார்கள். அதை இன்றைக்கும் அநேகர் செய்து வருகிறார்கள். ஜெபத்தின் மூலம் மனிதன் சுலபமாக நாடகமாடி விடலாம் என்றாலும் கர்த்தர் அதை வெறுக்கிறார். தன்னுடைய சீஷர் களைப் பார்த்து அவர், "நீயோ, ஜெபம் பண்ணும்போது உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" என்றார். மீண்டும், மீண்டும் இயேசு "அந்தரங்கம்" என்ற பதத்தைப் பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். அதன் மூலம் நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் நம் இருதயத் தைப் பார்க்கிறார் என்பதும், நம் இருதயத்தில் இருப்பது அவருக்கு நன்றாகத் தெரியும் என்பதையும் இயேசு உணர்த்துகிறார். ஜெபம் நடிப்பாக மாறி விடுகிறபோது அது மெய் ஜெபமாக இல்லாமல் ஜெபிக்கிறவனின் வார்த்தைகளில் உண்மை மறைந்து வார்த்தை ஜாலம் நுழைந்து, அவனுடைய குரலில் நடிப்பு மிகுந்து, ஜெபம் தேவைக்கு அதிகமாக கேட்ப வர்களைக் கவருவதற்காக நீண்டுவிடுகிறது. ஜெபம் இருதயத்தின் ஆழத்தில் இருந்து வர வேண்டும். வார்த்தைகள் அவசியம் என்றாலும் பயன்படுத்து கிற வார்த்தைகள் இருதயத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும். இருதயம் ஒன்றை நினைக்க வார்த்தைகள் அதை மீறியதாக இருக்கக் கூடாது. ஜெபிப்பது இலகுவானதல்ல; அதில் நடிப்புக்கு ஒருபோதும் இடமிருக்கக்கூடாது. போலி ஜெபங்களை வெறுத்து ஒதுக்குகிற கர்த்தர் மெய் ஜெபங்களைக் கேட்டு அவற்றை ஆசீர்வதிக்க ஒருபோதும் தவறுவதில்லை. கிறிஸ்தவம் இருதயத்தை சார்ந்தது. அதனால் ஜெபம் இருதயத்தில் இருந்தே எப்போதும் வரவேண்டும்.*

# - யாக்கோபு -
## பிரசங்கிகருக்கு இலக்கணம்

இந்த இதழின் ஆரம்ப ஆக்கத்தில் யாக்கோபு நூலை அறிமுகப் படுத்தியிருக்கிறேன். யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் சகோதரர். எருசெலேம் திருச்சபையின் பிரதான மூப்பர். திருச்சபையின் மதிப்புக்கும், அங்கீகாரத்துக்கும், அன்புக்கும் உரித்தானவர். திருச்சபையின் மூன்று பெருந்தூண்களில் ஒருவர். இத்தனைத் தகைமை களையும் கொண்டிருந்த யாக்கோபுவின் இன்னுமொரு முக்கியமான, சிறப்பான தகுதியை நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியாது. அது யாக்கோபு பிரசங்க வரத்தை இயற்கையிலேயே கொண்டிருந்தார் என்பது தான். யாக்கோபுவைக் கேட்டால் தனக்கிருந்த அத்தனை சிறப்பம்சங் களிலும் இதைத்தான் மிகப் பெரும் ஆசீர்வாதமாகக் கருதுவதாகக் கூறுவார். இன்று பிரசங்க ஊழியத்தில் இருக்கும் போதகர்களும், பிரசங்க ஊழியத்துக்கு தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறவர்களும் யாக்கோபுவின் பிரசங்க உத்திகளையும், பிரசங்க முறையையும் ஆராய்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தமிழினத்தில் வேதபூர்வமாக பிரசங்கிக்கிறவர்கள் தொகை மிகக்குறைவென்பதை நம்மில் அநேகர் அறிந்திருக்கிறோம். அந்த நிலை என்றாவது மாறவேண்டுமல்லவா? கூலிக்கு மாரடிக்கும் எண்ணப்போக்குக் கொண்ட ஊழியங்கள் முற்றாகத் தொலைந்து ஆவியின் மெய்யான அனுக்கிரகத்துடன், சத்தியத்தை சத்தியமாக சத்திய விளக்கிப் போதிக்கும், மனுஷ பயமில்லாமல் கர்த்தரை மட்டுமே மகிமைப்படுத்தும் யாக்கோபு போன்ற பிரசங்கிகள் நம்மினத்தின் இன்றைய தேவை. பட்டிதொட்டியெல்லாம் ஊழியங்கள் ஆரம்பிக்கும் கனவில் வாழ்ந்தால் மட்டும் போதாது. அந்தக் கனவு நிறைவேற யாக்கோபு போன்றவர்கள் தேவை. அத்தகையவர்களைக் கொண்டே கர்த்தர் மெய்த் திருச்சபைகளை நிறுவுகிறார். இனி யாக்கோபுவில் இருந்து அந்நூல் விளக்கும் பிரசங்கங்களில் இருக்க வேண்டிய அம்சங்களை விளக்கமாகப் பார்ப்போம்.

**(1) தன்னுடைய செய்தியைக் கேட்பவர்களிடம் நேரடியாக, விஷயத்தை வெளிப்படை யாக விளக்கிப் பேசுகிறார் யாக்கோபு.**

அப்படித்தானே எல்லோரும் பேச வேண்டும் என்று எளிதாக நீங்கள் எண்ணிவிடலாம். இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். யாக்கோபுவைப் போலவே பவுலும், பேதுருவும், யோவானும் தங்களுடைய நிருபங்களை எழுதியிருக்கிறார்கள். யாரையோ பார்த்துக் கொண்டு, யாருக்கோ செய்தி கொடுக்கவில்லை யாக்கோபு. பெரிய பிரச்சனைகளை, உள்ளத்தை அசைய வைக்கும், சிலரை ஆத்திரப்படச் செய்யும் ஆத்மீக விஷயங்களை அதில் தவறிழைத்திருக்கிற கிறிஸ்தவர்களுக்கு நேரடியாக எழுதுகிறார் யாக்கோபு.

அவருடைய எழுத்தில் ‘நீங்கள்’, ‘உங்கள்’, என்ற வார்த்தைகள் ஒவ்வொரு அதிகாரத்திலும் நிரம்பிக் காணப்படுகின்றன. இதையெல்லாம் திட்டுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தவறு செய்திருக்கிற மக்களை நேரடியாகப் பார்த்து தவறை உணர்த்தி திருந்திக் கொள்ளுவதற்கான வழியைக் காட்டு கிறார் யாக்கோபு. அப்படிப் போதிப்பதற்கு மிகுந்த மனத்தைரியமும், பிரசங் கம் கேட்கிறவர்கள் மதிக்கக் கூடியளவுக்கு பக்திவிருத்தியும், அதிக மனத் தாழ்மையும் வேண்டும். யார்கோபு நூல் முழுவதும் அவருடைய பேச்சு இந்த முறையில் நேரடியானதாக இருக்கிறது. நமக்கே எழுதியதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. எழுதியவர் நம்மைப் பார்த்துப் பேசுவதைப் போன்ற எண்ணத்தைத் தருகிறது.

இப்படியாக நேரடியாகப் பேசும் பிரசங்கிகள் இன்று நம்மினத்தில் குறைவு. திட்டுகிறவர்கள் எண்ணிக்கை எண்ணிமாளாது. கூரையைப் பார்த்துக்கொண்டும், கண்களை மூடிக்கொண்டும் பேசுகிறவர்களின் கூட்டம் அதிகம். பேசுகிற விஷயத்தில் வைராக்கியம் கொண்டு, கர்த்தரின் மகிமையில் அளப்பரிய ஆர்வம் கொண்டு, பாவத்தின் மேல் கடும் வெறுப்பைக் கொண்டு, ஆத்துமாக்களின் பரிசுத்த வாழ்க்கையில் அதிக அக்கறை இருந்து, அவர்கள் திருந்தியே ஆகவேண்டும் என்ற கடுங்குறிக் கோளுடன் பிரசங்கிக்கிற யாக்கோபுபோல் இன்றைக்கு எத்தனை பேர் நம்மினத்தில் இருக்கிறார்கள். தன்னலம், மதிப்பு, மக்களின் பாராட்டு, கைக்கு வரும் பணம் இதெல்லாம் பெரிதாகப்பட்டிருந்தால் யாக்கோபு இப்படி நேரடியாக, அப்பட்டமாக எழுதியிருக்க மாட்டார். இயேசு கிறிஸ்து வின் மகிமை ஒன்றே அவருக்கு பெரிதாக இருந்தது.

யாக்கோபு யாருக்குப் பின்னாலும் ஒளிந்திருந்து பேசவில்லை. எந்தப் போதனைக்கும் பின்னாலும் மறைந்திருந்து பேசவில்லை. எவருக்கோ எழுதுவதுபோன்ற எண்ணத்தைத் தோற்றுவித்து எழுதவில்லை. அவருடைய நேரடியான, இருதயத்தைத் தொடுகின்ற பேச்சை மெய்யான பிரசங்கிகளில் மட்டுமே பார்க்க முடியும். நீங்கள் அத்தகைய பிரசங்கியா?

**(2) தன் பேச்சைக் கேட்பவர்களுக்கு தன்னில் அன்பு பாராட்டக்கூடிய ஓர் உறவை ஏற்படுத்திப் பேசுகிறார் யாக்கோபு.**

இப்படி சொல்லுவதால் யாக்கோபு ஒரு செயற்கையான அன்பை வெளிப்படுத்திக் கேட்பவர்களுடைய பாராட்டைப் பெறுவதற்காக போலித் தனமாக நடந்துகொள்ளுவதாக நினைத்துவிடக்கூடாது. யாருக்கு யாக்கோபு இந்நிருபத்தை எழுதினாரோ அவர்களுக்கு யாக்கோபுவை நன்றாகவே தெரிந்திருந்தது. யாக்கோபு அவர்களுடைய போதகர்களில் ஒருவர். யாக்கோபுவின் நேர்மையிலும், பக்திவிருத்தியிலும் அவர்களுக்கு அளவில்லாத நம்பிக்கை இருந்தது. கடுமையான போதனையை முகத்தைப் பார்த்துப் பேசுவதுபோல் அவர் தான் நேசிக்கும் மக்களுக்கு கொடுக்கும் போது எந்தவிதத்திலும் வார்த்தைகளின் கடுமை குறையாமலும், அதே நேரத்தில் அந்த வார்த்தைகளை அன்பில் தோய்த்தெடுத்தும் அவர் பயன் படுத்துகிறார். அவரை அறிந்திருந்தவர்களாலேயே அவரைப் புரிந்து கொள்ள முடியும். இதிலிருந்து பிரசங்கிகள் எந்தளவுக்கு ஆத்துமாக்க

ளோடு நெருங்கிய உறவை வைத்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நிருபத்தின் ஆரம்பத்திலேயே அவர்களை சகோதரரே என்று அழைத்து எழுத ஆரம்பிக்கிறார். 1:16ல் மறுபடியும் "என் பிரியமான சகோதரரே" என்றழைக்கிறார். ஒவ்வொரு அதிகாரத்திலும் இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அவர்களை "சகோதரரே" என்றழைத்து அவர்கள் நலன்கருதி போதனைகளை வழங்குகிறார் யாக்கோபு.

ஆத்துமாக்களோடு நல்ல உறவில்லாமல் பிரசங்கம் செய்துவிட முடியாது. சில தடவைகள் யாக்கோபு போல் அவசியமான, கடுமையான போதனை களை பிரசங்கிகள் ஆத்துமாக்களுக்கு கொடுக்க நேரிடும். இருதயத்தை உலுக்கும் எத்தனைக் கடுமையான போதனையைக் கொடுக்க வேண்டி வந்தாலும் ஆத்துமாக்களோடு நல்லுறவை ஏற்படுத்தாமல் அவற்றைக் கொடுக்க முடியாது. யாக்கோபு தன் வார்த்தைகளை அளந்து அன்போடு பயன்படுத்தியிருக்கிறார்.

**(3) ஒரு நல்ல பிரசங்கத்தில் இருக்க வேண்டிய அருமையான உத்திகளை யாக்கோபு தன்னுடைய பிரசங்கத்தில் பயன்படுத்தியிருக்கிறார்.**

அ. அவர் தன்னுடைய செய்தியில் போதனை இதுதான் என்று விளக்குவதோடு நிற்காமல் அடிக்கடி அவற்றைக் கேள்விகளாக எழுப்பு கிறார். இதை ஒவ்வொரு அதிகாரத்திலும் கவனிக்கலாம். இந்தமாதிரியான வினாக்களை Rhetorical questions என்று அழைப்பார்கள். இப்படிக் கேள்விகள் எழுப்புவது நல்ல பிரசங்கத்தில் காணப்படும் ஒரு முக்கிய உத்தி. இந்தக் கேள்விகளிலேயே பதிலும் அடங்கியிருக்கும். ஆனால், விஷயத்தை நேரடியாக சொல்லாமல் இப்படிக் கேள்வியாகக் கேட்பதன் மூலம் பிரசங்கிப்பவர் கேட்பவர்கள் பதிலைப்பற்றி சிந்திக்கச் செய்கிறார்.

பிரசங்கத்திற்கு அழகூட்டுவதற்காக இந்தக் கேள்விகள் கேட்கப்படுவதாக எண்ணிவிடக்கூடாது. கேட்பவர்களை சிந்திக்கவைப்பதற்கும், அவர் களைப் பிரசங்கம் முழுவதும் நம்மோடு அழைத்துச் செல்வதற்கும் இந்த முறை உதவும். ஒரு சில உதாரணங்களை யாக்கோபுவில் கவனிப்போம். இரண்டாம் அதிகாரத்தில், கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டிருப்ப வர்கள் பட்சபாதம் காட்டக்கூடாது என்று சொல்லும் யாக்கோபு, அவ்வாறு பட்சபாதம்காட்டி சபையில் நடந்துகொண்டால் "உங்களுக் குள்ளே போதகம் பண்ணி தகாத சிந்தனைகளோடு நிதானிக்கிறவர்களா யிருப்பீர்களல்லவா? என்று கேட்கிறார் (2:4). பட்சபாதம் காட்டாதே என்று சொல்லி முடித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு சொல்லாமல் அதையே கேள்வியின் மூலம் புரியச் செய்வது நல்ல பிரசங்கத்தில் இருக்கும் உத்தி. இது கேட்பவர்களை நாம் பேசுவதைக் கேட்கவும், சிந்திக்கவும் வைக்கும். இத்தகைய வினாக்களைத் தொடர்ந்து 2ம் அதிகாரம் 5லிருந்து 7 வரையுள்ள வசனங்களில் காணலாம். இன்னுமொரு உதாரணத்தையும் கவனிப்போம். 2:14ல் யாக்கோபு கேட்கிறார், "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? கிரியைகளில்லாத விசுவாசம் இரட்சிக்காது என்று சொல்லி

யிருக்கலாம். அப்படிச் சொல்லாமல் உள்ளேயே பதில் அடங்கியிருக்கும் இந்தக் கேள்வியைக் கேட்டு யாக்கோபு செய்தி கேட்பவர்கள் பதிலைக் குறித்து சிந்திக்கச் செய்கிறார். இப்படிப் பல கேள்விகளை யாக்கோபு தன் செய்தியில் கேட்டிருப்பதை ஒவ்வொரு அதிகாரத்திலும் பார்க்கிறோம். இது பிரசங்கத்தில் பயன்படுத்த வேண்டிய நல்ல உத்தி.

ஆ. நல்ல பிரசங்கங்கள் உரையாடலைப்போல (Dialogue) இருக்கும். அதை யாக்கோபுவில் காணலாம். யாக்கோபுவை வாசிக்கும்போது பிரசங்கம் கேட்பதுபோல் இருக்கும். அதற்குக் காரணம் உரையாடல் முறையை யாக்கோபு தன் செய்தியில் கையாளுவதுதான். உண்மையில் யாக்கோபு யாருக்கு தன் நிருபத்தை எழுதினாரோ அவர்களோடு மனம்விட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார். தன்னுடைய செய்தி அவர்களுடைய இருதயத் தில் பதிந்து நல்ல விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பதே யாக்கோபு வின் நோக்கமாக இருக்கிறது. அதைத்தவிர வேறு நோக்கங்களை அவர் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் அவர் கேட்பவர்கள் தன் முன் பக்கத்திலேயே இருப்பதுபோல் எண்ணி அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். யாக்கோபு சுருக்கமான வசன நடையையும், எளிமை யான சொற்களையும் பயன்படுத்துவதற்கும் அதுதான் காரணம். பிரசங்கம் உரையாடலைப் போல இருக்க வேண்டும். கேட்டுக்கொண்டிருப்பவர்கள் பிரசங்கி தன்னைப்பார்த்துத்தான் பேசுகிறார் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். அதை யாக்கோபுவில் காணலாம்.

இ. யாக்கோபு மிகவும் எளிமையான உதாரணங்களைக் கையாளுகிறார். இந்த விஷயத்தில் யாக்கோபு இயேசு கிறிஸ்துவை அதிகம் நினைவுபடுத்து கிறார். இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் பயன்படுத்தியிருப்பதுபோன்ற எளிமையான, எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய அநேக உதாரணங்களை யாக்கோபு தன் நிருபத்தில் கையாண்டிருக்கிறார். ஒரு பிரசங்கம் நல்ல பிரசங்கமாக இருப்பதற்கு அதில் தெளிவான வேதசத்தியம் இருந்தால் மட்டும் போதாது. வேதசத்தியம் பிரசங்கத்திற்கு முதுகெலும்பு போல். பிரசங்கத்தில் விளக்கப்படுகின்ற வேதசத்தியங்களை கேட்பவர்கள் சந்தேகமில்லாமல் விளங்கிக்கொள்ளுவதற்கு தகுந்த நல்ல உதாரணங்களை யும் பிரசங்கி பயன்படுத்த வேண்டும். அந்த உதாரணங்கள் எப்படிப் பட்டவையாக இருக்க வேண்டும் என்பதற்கு இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் நல்ல உதாரணம். மக்களுக்கு நன்கு பரிச்சயமான, அவர்க ளுடைய சுற்றுச்சூழலில் இருந்து உதாரணங்களை இயேசு பயன்படுத்தி யிருக்கிறார். அதேபோல யாக்கோபுவும் இயற்கையைப் பயன்படுத்தி அநேக உதாரணங்களைத் தந்திருக்கிறார். பிரசங்கத்தில் உதாரணங்களை அள வோடு, அவசியமான இடங்களில் மட்டும் பயன்படுத்த வேண்டும். சிலர் பிரசங்கத்தை உதாரணங்களாலேயே நிரப்பிவிடுவார்கள்.

யாக்கோபு நாவை அடக்கியாள வேண்டும் என்று மூன்றாம் அதிகாரத்தில் விளக்குகிறார். நாவு எத்தனை பலம் வாய்ந்தது, அது அநேக நன்மைகளைச் செய்ய உதவியாக இருந்தபோதும் பெருங்கொடுமையான செயல்களை நாம் செய்துவிடவும் துணை நின்றுவிடும் என்பதை விளக்க

*யாக்கோபு எடுத்தாளும் உதாரணங்கள் அவர் எத்தனை சிறந்த பிரசங்கி என்பதை நமக்கு விளக்குகிறது. குதிரை, கப்பல், நெருப்பு ஆகிய உதாரணங் களை யாக்கோபு பயன்படுத்தியிருக்கிறார். இந்த உதாரணங்களை அவர் நினைத்துப் பார்க்காமல் பயன்படுத்தவில்லை. உதாரணங்கள் தேவை என்பதற்காகவும் பயன்படுத்தவில்லை. நாவின் தன்மையை விளக்கவும், அதன் வலிமையையும், பலவீனத்தையும் எடுத்துக்காட்டவும் யாக்கோபு ஆராய்ந்து பார்த்து இந்த உதாரணங்களைத் தெரிவு செய்திருக்கிறார். அவர் சொல்ல வந்த விஷயங்களை இந்த உதாரணங்கள் தெள்ளத் தெளிவாக விளக்கிவிடுகின்றன. இந்த உதாரணங்களில் இன்னொரு சிறப்பம்சம், இவை கேட்பவர்களுக்குத் தெரிந்த, அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் உதார ணங்கள் என்பதுதான். அரைத்த மாவையே அரைப்பதுபோல் யாக்கோபு உதாரணங்களைக் கையாளவில்லை. எளிமையான, எல்லோருக்கும் தெரிந் திருந்த உதாரணங்களை அவர் எங்கு, எப்படிப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதில்தான் அவருடைய பிரசங்க வல்லமையையும், அறிவையும் அறிந்து கொள்ளுகிறோம்.*

**(4) யாக்கோபுவின் செய்தி நல்ல பயன்பாடுகளால் நிரம்பி வழிகிறது.**

*பிரசங்கத்தின் முக்கிய அம்சம் அதில் இருக்கும் சத்தியம். அந்த சத்தியம் வெறுமனே விளக்கப்பட்டுவிட்டால் மட்டும் பிரசங்கம் பிரசங்கமாகி விடாது. விளக்கப்படும் சத்தியம் கேட்பவர்களுக்கு எந்த முறையில் அவசிய மானது, அவர்களுடைய வாழ்க்கையில் அதன்படி அவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதை ஆணித்தரமாக, அவர்களுடைய குறைகளை சுட்டிக்காட்டி, செய்ய வேண்டியதை எடுத்துக்காட்டி உணர்த்தும்போது தான் பிரசங்கம் முழுமையடைகிறது. நான் இப்போது சொன்னதைச் செய்வதுதான் பிரசங்கத்தின் பயன்பாடு. பயன்பாடில்லாத பிரசங்கம் சக்கரமில்லாத வண்டிக்குச் சமம். வேட்டில்லாத துப்பாக்கிக்குச் சமம். பிரசங்க ஊழியத்தில் இருக்கும் அநேகர் இன்றைக்கு பயன்பாட்டில் கவனம் செலுத்துவதில்லை.*

*யாக்கோபுவின் செய்தி அருமையான, ஆணித்தரமான பயன்பாடுகளால் நிரம்பி வழிகிறது. சத்தியத்தை விளக்குவதோடு மட்டும் நின்றுவிடாமல் யாக்கோபு இருதயத்தை அசைக்கும் வல்லமையுள்ள பயன்பாடுகளை கேட்பவர்கள் முன் வைக்கிறார். புதிய ஏற்பாட்டின் அனைத்து நூல்களை யும்விட யாக்கோபுவில் ஆழமான பயன்பாடுகள் அதிகளவில் இருக்கின் றன. நாவை அடக்கவேண்டும் என்று அருமையாக விளக்கிவிட்டு யாக்கோபு (3ம் அதிகாரம்) நீங்கள் இப்படி இருக்கக்கூடாது என்று அடித்துச் சொல்லு கிறார். அது பயன்பாடு. நீங்கள் ஞானிகளாயிருந்தால் கிரியைகளை நடத்தை யால் காட்டுங்கள் என்று தேவ ஞானத்தை அதிகம் கொண்டிருந்த அவர் களைப் பார்த்து அடித்துச் சொல்லுகிறார் (3:13). அது பயன்பாடு. யாக்கோபு வின் ஒவ்வொரு அதிகாரமும் பயன்பாடுகளால் நிறைந்திருக்கின்றன. யாக்கோபுவை வாசிக்கும்போது அது நம்முடைய இருதயத்தைத் தொடு வதற்குக் காரணம் எழுதியவர் தன் செய்தியைப் பயன்பாட்டோடு கொடுத் திருப்பதால்தான். பிரசங்க ஊழியத்தில் இருப்பவர்கள் யாக்கோபுவை ஆராய்ந்து வாசித்து பிரசங்கம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

# இங்கிலாந்தில் சீர்திருத்தம்

## (இரண்டாம் பகுதி)

இரத்தவெறி பிடித்த மேரியின் கொடுமைகளைப்பற்றி கடந்த இதழில் பார்த்தோம். அவளுடைய ஆட்சியில் கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் பெருந்துன்பத்தை அநுபவித்தார்கள். எரியும் நெருப்பில் உயிரோடு கொளுத்தப்பட்டு பலிகொடுக்கப்பட்டவர் களைப் பார்த்து இங்கிலாந்து தேசமே அதிர்ந்தது. அந்த நினைவுகள் நெடுங்காலத்துக்கு மக்கள் மனதிலிருந்தன. எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்துவுக்காக இரத்தப்பலி கொடுத்தவர்களைப் பற்றி ஃபொக்ஸ் (Fox) எழுதிய நூல், பெரிய அளவில் ஒவ்வொரு திருச்சபை யிலும் மக்கள் வாசிக்கும்படி வைக்கப்பட்டிருந்தது இந்த நினைவுகள் தொடரும்படிச் செய்தன.

ஆனால், இத்தகைய உபத்திரவங்கள் மட்டுமே இங்கிலாந்து புரொட்டஸ் தாந்து தேசமாக மாறிவிடுவதற்கு காரணமாக அமைந்துவிடவில்லை. அதற்கு இன்னுமொரு முக்கிய காரணமாக இருந்தது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட வேதம். ஆங்கில மொழிபெயர்ப் பாகிய வேதத்தை மக்கள் ஆர்வத்தோடு வாங்கி வாசிக்க ஆரம்பித்தார்கள். படுவேகமாக வேதம் எங்கும் விற்பனையானது. இதற்குக் காரணமாக இருந்தவர் வில்லியம் டின்டேல் (William Tyndale). டின்டேல் எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் பாண்டித்தியம்பெற்ற பண்டிதராக இருந்தார். தனக்குத் தெரிந்திருந்த ஏழு மொழிகளில் எந்த மொழியில் பேசினாலும் அவர் தன்னுடைய சொந்த மொழியில் பேசுகிறார் என்று தான் கேட்பவர்களை எண்ண வைக்கும் என்று அவரைப்பற்றிய பேச்சிருந் தது. அந்தளவுக்கு மொழிப்பாண்டித்தியம் கொண்டிருந்த அறிஞராக டின்டேல் இருந்தார். ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்களில் 1510-1521க்கும் இடைப்பட்ட காலங்களில் கல்வி பயின்ற பின், நாட்டிலிருந்த பெரும்பாலான சபைத்தலைவர்களுக்கு கத்தோலிக்க மாஸ் புத்தகத்தில் இருந்ததைத் தவிர வேறெதுவும் தெரியாதிருந்ததை உணர்ந்து, கலப்பை பிடிக்கின்ற சாதாரண சிறுவனும் தன்மொழியில் வாசிக்கக்கூடியவிதமாக வேத மொழிபெயர்ப்பொன்றை வெளியிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால், ரோமன் கத்தோலிக்க மதம் ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் வேறெந்த மொழியிலும்கூட வேதம் மொழிபெயர்க்கப்பட்டு இங்கிலாந்தில் பிரசுரிக்கப்படுவதற்கு ஒருக்காலும் அனுமதி தராதென்பதை வெகுவிரைவில் உணர்ந்தார்.

வேதத்தை எப்படியாவது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேயாக வேண்டும் என்று உறுதிபூண்ட வில்லியம் டின்டேல் ஜெர்மனிக்குப்

போனார். அக்காலத்தில் ஜெர்மனி ஒரே நாடாக இருக்கவில்லை. பல பகுதிகளாகப் பிரிந்திருந்தது. ஆகவே, அதில் எந்தவொரு பகுதியிலாவது, சுதந்திரம் கிடைக்கின்ற பகுதியில் வேத மொழிபெயர்ப்பை அச்சிடத் தீர்மானித்தார். 1525ம் ஆண்டில் அவருடைய முயற்சி வெற்றியடைந்து புதிய ஏற்பாடு முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முடித்தார். இலத்தீன் மொழியில் இருந்து அவர் மொழிபெயர்த்த புதிய ஏற்பாட்டைப் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் ஜெர்மனியில் அச்சிட்டார். அதற்கு கத்தோலிக்க சபையின் அனுமதி தேவையாயிருந்தது. இங்கிலாந்தைப் போலவே ஜெர்மனியிலும் வேறு மொழிகளில் வேதம் வெளியிடப்பட தடையிருந்தது. ஒருவழியாக கத்தோலிக்க சபையின் அனுமதியை ஜெர்மனியில் பெற்று டின்டேல் வேதத்தை அச்சிட்டு முடித்தார். அவற்றை பொதிகளுக்கு மத்தியில் மறைத்து வைத்து இங்கிலாந்துக்கு கப்பலில் அனுப்பிவைத்தார். கையில் கிடைத்த ஒவ்வொரு பிரதியையும் சபை எரியும் நெருப்பிலிட்டது. டின்டேலை அவர்களால் உடனடியாகப் பிடிக்க முடியவில்லை. மிகவும் பாடுபட்டு பலவருடங்களுக்குப் பிறகு அவரை பிடித்தனர். அவருக்கு முன் இரத்தபலி கொடுத்தவர்களைப் போலவே டின்டேலும் எரியும் நெருப்பில் உயிரோடு கொளுத்தப்பட்டார். கிறிஸ்து இயேசுவை விசுவாசித்ததும், வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததும் அவருடைய எதிரிகளுக்குப் பெரும் பாவமாகப்பட்டது. தனக்கு இப்படி நேரும் என்பது டின்டேலுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அதற்காக அவர் தன்னைப் தயார்செய்து கொண்டிருந்தார். தன் கடைசிக் காலத்தில் அவர் அன்ட்வேர்பில் ஆங்கிலேய வியாபாரிகள் கூடிவரும் இடத்தில் மறைந்து வாழ்ந்துகொண்டிருந்தார். நண்பனைப் போல நடித்த ஒருவன் அவரை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்துவிட்டான். கொஞ்சக் காலத்துக்கு அவர் பிரசெல்ஸுக்கு வடக்கே ஒன்பது மைல் தூரமிருந்த வில்வோர்ட் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது அவர் சிறை அதிகாரிக்கு எழுதியிருந்த ஒரு கடிதம் இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. டின்டேல் தன் கையால் எழுதிய கடிதங்களில் இந்தக் கடிதம் மட்டுமே இன்றுவரை பாதுகாக்கப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் டின்டேல் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தயவுடன் உங்களிடம் வேண்டிக் கொள்ளுகிறேன். இந்தப் பனிக்காலத்தில் இங்கு நான் சிறையிருக்கும் காலம்வரையும் உங்களுடைய சிறை மேற்பார்வையாளரிடம் சொல்லி அவரிடம் இருக்கும் என்னுடைய சொந்தப் பொருள்களை அனுப்பி வைக்கும்படிக் கூறுங்கள். எனக்கு அதிக சளி பிடித்திருக்கிறது. இந்த சிறையிலிருந்த காலத்தில் அது நிரந்தரமானதாக மாறிவிட்டிருக்கிறபடியால் என் தொப்பியைத் திருப்பித் தந்தால் அது எனக்கு ஆறுதலாக இருக்கும். நான் இப்போது அணிந்திருக்கும் மேலங்கி மெல்லியதானது. என்னுடைய பனிக்கால மேலங்கியை அனுப்பிவைத்தால் உதவியாக இருக்கும். அத்தோடு, என் கால்களை துடைத்துக்கொள்ள கைத்துணியையும், என்னுடைய தடித்த வுலன் சட்டையையும் கருணைகாட்டி அனுப்பித்தரச் சொல்லுங்கள். நான் பனிக்காலத்தில் அணியும் காலங்கிகளும், தூங்கும்

*போது அணியும் தொப்பியையும் அனுப்பிவைக்கும்படி சொல்லுங்கள். மாலை நேரத்தில் தனிமையில் இருட்டில் இருப்பது சோர்வைத் தருகிறது. என் சிறையில் ஓர் ஒளிவிளக்கு இருக்க தயவுசெய்து அனுமதி தாருங்கள்.*

*"இதையெல்லாம்விட மிகுந்த தயவுபாராட்டி என்னுடைய எபிரேய வேதத்தையும், எபிரேய இலக்கண நூலையும், எபிரேய சொல்லகராதியை யும் சீக்கிரமே திருப்பித்தரச் சொன்னீர்களானால் அது நான் என் படிப்பைத் தொடர உதவும். இதற்கெல்லாம் பதிலாக உங்களுடைய ஆத்மீக இரட்சிப்போடு ஒத்துப்போகக்கூடிய உங்களுடைய சகல இருதய விருப்பங்களும் நிறைவேறட்டும். இந்தப் பனிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக என்னுடய விஷயத்தில் மாறான முடிவொன்றை எடுக்கும் சூழ்நிலை உருவாகுமானால் நான் என்னுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை மகிமையடையும்படியாக கர்த்தரின் சித்தத்திற்கு உட்பட்டு பொறுமையோடு காத்திருப்பேன். அவருடைய ஆவி உங்களு டைய இருதயத்தை வழிநடத்த நான் ஜெபிக்கிறேன். ஆமேன். வி. டின்டேல்."*

*இங்கிலாந்தின் ஒவ்வொரு திருச்சபையிலும் ஆங்கில வேதப்புத்தகம் இருக்கவேண்டும் என்று இறக்கும் தருவாயில் வில்லியம் டின்டேல் செய்த ஜெபம் நிறைவேறியதாக ஏற்கனவே எழுதியிருந்தோம். டின்டேல் பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டையும் மொழிபெயர்த்து அச்சிடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும், தன் வாழ்நாளில் அவரால் புதிய ஏற்பாட்டை மட்டுமே மொழிபெயர்க்க முடிந்தது. அவருக்குப் பிறகு வந்தவர்கள் பழைய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். இங்கிலாந்து வில்லியம் டின்டேலுக்கு நன்றி பாராட்டும் கடமையைக் கொண்டிருக்கிறது.*


# சிறப்புச் சலுகையில் நல்ல நூல்கள்

மூன்று நல்ல நூல்களை வாசகர்கள் சிறப்புச் சலுகையாக முப்பது ரூபாய் மட்டும் (ரூபாய் 30/-) நன்கொடை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

**பரிசுத்த வேதாகமம்**
**பிரசங்கம் ஏன்!**
**கிறிஸ்தவன் யார்!**

இந்த நூல்களை வாசகர்கள் கீழ்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 600425
தொலைபேசி எண்: 9994181010

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

நூல்களின் விலை மற்றும் தபால் செலவுபற்றிய விபரங்களுக்கு கீழ்வரும் முகவரிகளோடு தொலேபேசி மூலமோ எழுதியோ தொடர்புகொள்ளுங்கள்.

இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி எண்: 9994181010

கிருபை இலக்கிய சேவை
19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6
ஸ்ரீ லங்கா
தேலைபேசி எண்:

# பரிசேயர்களின் நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் . . .

இயேசு கிறிஸ்து "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கப்பட மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மத்தேயு 5:20ல் சொல்லியிருக்கிறார். இந்த வார்த்தைகள் அவருடைய மலைப்பிரசங்கத்தின் முன்னுரையின் ஒரு பகுதியாக இருக்கின்றன. மத்தேயு 5ம் அதிகாரத்தில் ஆரம்பித்து 7ம் அதிகாரம் முடிவுவரை இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் காணப்படுகிறது. ஏற்கனவே, கலிலேயா எங்கும் சுற்றி (4:23) பல இடங்களில் சுவிசேஷ ஊழியப்பணிகளில் ஈடுபட்டு இப்போது இடம் குறிப்பிடப்படாத இந்த இடத்துக்கு இயேசு தன்னுடைய சீஷர்கள் பின்தொடர வந்திருந்தார். கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலுமிருந்து திரளான ஜனங்கள் அவரைப் பின்தொடர்ந்து வந்திருந்தார்கள் (4:25). வந்திருந்த மக்கள் எல்லோரும் இயேசு ஏதாவது அற்புதங்கள் செய்ய மாட்டாரா? தங்களுடைய குறைகளைத் தீர்த்துவைக்கமாட்டாரா என்ற எதிர்பார்ப்புடன்தான் வந்திருந்திருப்பார்கள். அவர்களில் அவருடைய போதனைகளால் கவரப்பட்டு சத்தியத்தை மேலும் அறிந்துகொள்ள வந்திருந்தவர்களும் நிச்சயம் இருந்திருப்பார்கள்.

இயேசு இத்தனைத் திரளான மக்களைப் பார்த்ததும் உயரமான ஒரு குன்றின் மேல் ஏறி அமர்ந்தார். அவர் உட்காருவதைக் கண்டதும் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்போது இயேசு தம்முடைய வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசம் செய்தார். அந்த உபதேசமே மலைப்பிரசங்கம். இதை முக்கியமாக அவர் தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்தபோதும் அங்கிருந்த திரளான மக்களனைவரும் அதனைக் கேட்டார்கள். அதனால்தான் 7ம் அதிகாரத்தின் கடைசி வசனம் "ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று சொல்லுகிறது. இத்தனைத் திரளான மக்களும் காதுகொடுத்துக் கேட்கும்படி இயேசு இந்த நீண்ட பிரசங்கத்தை செய்திருக்கின்றார் என்றால் அவருடைய குரல் வளம் எத்தகையதாக இருந்திருக்க வேண்டும்? இயேசு மனிதராக இருந்த காலத்தில் நிச்சயம் பலசாலியாக இருந்திருக்க வேண்டும். அவருடைய பிரசங்கத்தில் இருந்த அதிகாரத்தைப் பார்த்து மக்கள் அதிக ஆச்சரியப்பட்டார்கள் என்று மத்தேயு 7:28 சொல்லுகிறது.

அந்த ஆச்சரியத்துக்குக் காரணம் அவருடைய பிரசங்கம் குழப்பமில்லாமல் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், இயேசுவின் இருதயத்தில் இருந்து வந்ததாகவும் இருந்ததால்தான். வேதபாரகர்களும், பரிசேயர்களும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்ததால் இந்த முறையில் அவர்களால் அதிகாரத்துடன் போதிக்க முடியவில்லை. இந்த மக்களால் இயேசுவுக்கு ஆகவேண்டியது எதுவும் இருக்கவில்லை. அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமும் அவருக்கு இருக்கவில்லை. அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் விரும்புவதைப் போதிக்கும் அவசியம் இருக்கவில்லை. அவர்கள் தன் பின்னால் எப்போதும் திரிய வேண்டும் என்பதற்காக எதையும் சொல்லி அவர்களை நம்பவைக்கும் அவசியமும் அவருக்கு இருக்கவில்லை. இன்று நாம் நூற்றுக்கணக்கான தமிழினத்துக் கிறிஸ்தவப் பிரசங்கிகளின் ஊழியங்களில் கவனிக்கின்ற எதுவும் அன்று இயேசுவினுடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் இருக்கவில்லை. இன்றைய கிறிஸ்தவ பிரசங்க ஊழியங்களுக்கும், இயேசு கிறிஸ்துவின் ஊழியத்துக்குந்தான் எத்தனை வேறுபாடு!

இயேசு தன்னுடைய மலைப்பிரசங்கத்தின் ஆரம்பத்திலேயே வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, “வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று சொல்லுகிறேன்” என்று அதிரடியாக தன் பிரசங்கத்தை ஆரம்பித்திருந்தார். இதைக் கேட்டவர்கள் நிச்சயம் அசந்து போயிருப்பார்கள். வேதபாரகர்கள், பரிசேயர்களுடைய நீதியை விட உயர்ந்த நிலையில் நம்முடைய நீதி இருப்பதா? இது என்ன வில்லங் கம் என்று அங்கலாயித்திருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள நாம் முதலில் வேதபாரகர், பரிசேயர் என் போர் யார் என்று அறிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய ஊழியம் என்ன? அவர்கள் மக்கள் மத்தியில் எப்படி வாழ்ந்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

## வேதபாரகர்களினதும் பரிசேயர்களினதும் நீதி

இயேசு வேதபாரகர், பரிசேயர்களினுடைய நீதியைவிட உங்கள் நீதி அதிகமாக இருக்க வேண்டும் என்று தன்னுடைய சீஷர்களைப் பார்த்துச் சொன்னார். இது கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் பொருந்தும். இதன் பொருளை அறிந்துகொள்ளுமுன் வேதபாரகர், பரிசேயர் என்போர் யார் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

### வேதபாரகர்

பழைய ஏற்பாட்டைப் போதிப்பதிலும், விளக்குவதிலும் நேரத்தை செலவழித்தவர்கள் வேதபாரகர். பழைய ஏற்பாட்டைப் படிப்பதற்காக தங்களுடைய முழு வாழ்நாளையும் கொடுத்தவர்கள் வேதபாரகர். ஜெப ஆலயங்களில் இருக்கும் பழைய ஏற்பாட்டுப் பிரதிகள் அழியும் நிலையை எட்டும்போது அதைக் கவனமாக வார்த்தைக்கு வார்த்தை எழுதி, திருத்தம் பார்த்துப் பிரதி எடுக்கும் பணியையும் அவர்களே செய்து வந்தார்கள். யூதர்கள் கர்த்தரின் வேதமாகிய பழைய ஏற்பாட்டைக் கருத்தோடும்,

*பயபக்தியோடும் பாதுகாத்து வந்தார்கள். இன்றைக்கு அந்தமுறையில் வேதத்துக்கு கிறிஸ்தவர்கள்கூட மதிப்பளிப்பதில்லை. பழைய ஏற்பாட்டுக்கு அத்தனை மதிப்பளித்த யூதர்கள் அதை எழுத்தில் வடித்துப் பிரதி எடுத்தும், அதைப் போதித்தும் வரும் வேதபாரகர்கள் மீது எந்தளவுக்கு மரியாதை வைத்திருந்திருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள். அப்படிப்பட்ட வேதபாரகர்களுடையதைவிட உங்கள் நீதி அதிகமாக இருக்க வேண்டும் என்று இயேசு சொன்னதைக் கேட்டு அவர்கள் அசராமல் வேறென்ன செய்ய முடியும்?*

**பரிசேயர்**

*பரிசுத்தத்திற்கும், பரிசுத்தமாக எல்லாக் காரியங்களையும் செய்து வருவதிலும் பரிசேயர்கள் பேர்போனவர்கள். இதனாலேயே இவர்களை "பிரிந்திருப்பவர்கள்" என்று அழைத்தார்கள். அவர்கள் தாங்கள் வகுத் துள்ள நியதிகளைக் கவனத்தோடு பின்பற்றுவதில் மற்றெல்லோரையும் விட சிரத்தையாக இருந்தார்கள். தாங்கள் வகுத்திருந்த விதிகளினால் கர்த்தருடைய கட்டளைகளைச் சுற்றி ஒரு வேலியையும் அமைத்திருந்தார் கள். கவனத்தோடு கட்டளைகளைப் பின்பற்றுபவர்கள் என்ற பெயரைப் பெற்றிருந்தார்கள். ஒருவரைப் "பரிசேயன்" என்று இன்றைக்கு கேளியாக நாம் அழைத்துவிடுகிறோம். அதாவது, போலித்தனமான தெய்வபக்தியுள்ள வன் அல்லது வெறும் சடங்காக எதையும் செய்கிறான் என்ற பொருளில் அதை நாம் மரியாதைக்குறைவான வார்த்தையாக பயன்படுத்துகிறோம். ஆனால், அன்று பரிசேயர்களை யூதர்கள் அந்தவிதத்தில் பார்க்கவில்லை. பரிசேயர்கள் தேவனுடைய கட்டளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அத்தோடு அவற்றை எவரும் மீறுவதைத் தடுக்கவேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். இதற்காக அவர்கள் வாரத்திற்கு இரண்டு முறை உபவாசம் இருந்தார்கள். வேதத்தில் எங்கேயும் வாரத்துக்கு இருமுறை உபவாசம் இருக்கும்படி சொல்லவில்லை. உண்மையில், பழைய ஏற்பாடு வருடத்துக்கு ஒருமுறை உபவாசம் செய்யும்படி மட்டுமே ஆலோசனை சொல்லுகிறது. கர்த்தரின் கட்டளைகளைப் பாதுகாத்து அதை எவரும் மீறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வக்கோளாறு பரிசேயர்களை எல்லைமீறி புதிய கட்டளைகளை வகுக்க வைத்தது. கர்த்தரின் கட்டளைகளைப் பாதுகாக் கிறோம் என்ற எண்ணத்தில் அவர்கள் அதைச் செய்தார்கள். ஓய்வு நாளைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது தேவ கட்டளை. அதற்காக அந்த நாளில் சமைக்கக்கூடாது, காலணியில் இருக்கும் கயிரைக் கட்டவோ பிரிக்கவோ கூடாது, துணி துவைக்கக்கூடாது, நெருப்பை உண்டாக்கவோ, அவிக்கவோ கூடாது என்று எண்ணற்ற விதிகளை ஏற்படுத்தி வைத்திருந்து தாங்கள் அவற்றைக் கருத்தோடு பின்பற்றியதோடு சகல யூதர்களும் அவற்றைப் பின்பற்றும்படி விதித்திருந்தார்கள்.*

*யூதர்கள் அனைவருமே வேதபாரகரையும், பரிசேயரையும் ஒழுக்கத்தின் அடையாளமாகப் பார்த்தார்கள். சாதாரண யூதன் தன்னைப் பார்த்து, "இந்தப் பரிசேயர்கள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களைப்போல தேவபக்தியுள்ளவனாக என்னால் ஒருபோதும் இருக்க முடியாது" என்று*

*கூறுவான். இயேசுகூட பரிசேயர்கள் கர்த்தரின் கட்டளைகளுக்கு கொடுத்த மரியாதையைக் கவனித்திருக்கிறார். பரிசேயர்கள் கடுமையாக அந்தக் கட்டளைகளைப் பின்பற்றச் செய்த முயற்சிகளையும் பாராட்டியிருக்கிறார்.*

*இந்தவிதமாக யூதர்கள் வேதபாரகர்களைப்பற்றியும், பரிசேயர்களைப் பற்றியும் எண்ணிக்கொண்டிருந்த சூழ்நிலையில் இயேசு அதிரடியாக அவர்களை விமர்சித்து, அவர்களுடைய நீதியைவிட உங்கள் நீதி உயர்வாக இருக்க வேண்டும் என்று சொன்னது கேட்டவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் முதலில், வேதபார கர்களைப்பற்றியும், பரிசேயர்களைப்பற்றியும் இயேசு இத்தனைத் தவறாகப் பேசுகிறாரே என்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள். இரண்டாவதாக, அவர் களைவிட பரிசுத்தத்தில் நாம் உயர்வாக இருக்க வேண்டும் என்கிறாரே, அது எப்படி முடியும்? என்று அதிர்ந்திருப்பார்கள்.*

## வேதபாரகர்களினதும் பரிசேயர்களினதும் போலி நீதி

*வேதத்தை நாம் ஆராய்ந்து படிக்கும்போது இயேசு வேதபாரகர்களையும், பரிசேயர்களையும் அநேக தடவைகள் விமர்சித்திருப்பதைக் காணலாம். முக்கியமாக மத்தேயு 23ம் அதிகாரத்தில் இதைப் பார்க்கலாம். இந்த அதிகாரத்தில் காணப்படும் இயேசு கிறிஸ்துவின் போதனையை ஆராய்ந்து படித்தால் வேதபாரகர்கள், பரிசேயர்களுடைய நீதி எப்படி இருந்தது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். இந்தப் பகுதியில் காணப்படும் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பரிசேயர்களுடையதை விட நம்நீதி எந்தவகையில் உயர்ந்திருக்கவேண்டும் என்பதை விளக்குகிறது.*

### அ. அவர்களுடைய நீதி இருதயத்தைச் சார்ந்ததாக இல்லாமல் வெளிப்புற நடவடிக்கைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது.

*தங்களுடைய நீதியையும், ஒழுக்கத்தையும் பரிசேயர்கள் யூதர்கள் முன் பெரிதுபடுத்தினார்கள். அதைப்பற்றிப் பேசுவதும், யூதர்கள் பார்க்கும்படி தங்கள் மத நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ளுவதும் அவர்களுக்கு அவசியமாகப்பட்டது. அவர்கள் தெருமுனைகளில் நின்று எல்லோரும் பார்க்கும்படி ஜெபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். நின்று கொண்டே எப்போதும் ஜெபித்தார்கள். சத்தமாக சகலரும் கேட்கும்படியே அவர்களுடைய ஜெபம் எப்போதும் இருந்தது. வறியவர்களில் எவருக் காவது அவர்கள் பணம் கொடுத்தபோது பக்கத்தில் யாராவது இருந்து சங்கு ஊதும்படிப் பார்த்துக்கொண்டார்கள். சத்தம் கேட்டு எல்லோரும் தங்களுடைய வேலைகளை நிறுத்திவிட்டு பரிசேயர்கள் யாருக்கு பணம் கொடுக்கிறார்கள், எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று பார்க்க வைப்பதற் காகவே இந்த ஏற்பாடு. நூறு ரூபாய் நோட்டொன்றை பரிசேயர்கள் சத்தமில்லாமல், யாருக்கும் தெரியாமல் உண்டியலில் போடுவதென்பது ஒருபோதும் நடக்காத காரியம். அவர்கள் தாங்கள் கொண்டுவந்திருக்கிற பெரிய தங்கக் காசுள்ள பைகளை உயரத்தூக்கிப் பிடித்து ஒவ்வொரு தங்கக் காசும் சத்தத்தோடு உண்டியலில் விழும்படிப் பார்த்துக் கொள்ளுவார்கள். எல்லோரும் உண்டியலில் விழும் காசைப் பார்க்கவும் அதன் சத்தத்தைக் கேட்கவுமே இந்த ஏற்பாடு. ஒரு முறை இயேசுவின்*

*சீஷர்கள் மேசையில் கை கழுவாமல் சாப்பிட அமர்ந்ததைப் பார்த்து பரிசேயர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களைப் பார்த்து இயேசு சொன்னார், "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்" (மத். 19:19-20). இதன் மூலம், பரிசேயர்கள் தங்கள் வாழ்க்கையில் வெளிப்புற நடவடிக்கைகளில் காட்டுகின்ற அக்கறையை இருதயத்தின் சிந்தனைகளிலும், செயல்களிலும் காட்டுவதில்லை என்பதை விளக்குகிறார் இயேசு.*

*இன்னுமொரு இடத்தில் இயேசு பரிசேயர்களை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள் என்று விமர்சித்தார். "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" என்றார் இயேசு (மத். 23:27). அவர் மேலும், "நீங்கள் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்றார். (மத். 23:28).*

*பரிசேயர்களையும், வேதபாரகர்களையும் நாம் "குயின் மேரி" கப்பலுக்கு ஒப்பிடலாம். 1936ம் ஆண்டில் தன் பயணத்தை ஆரம்பித்த இந்தக் கப்பல் அன்றிருந்த கப்பல்களில் மிகவும் பெரியதாக இருந்தது. நாற்பது வருடங்களையும் ஓர் உலகப்போரையும் சந்தித்து வயதாகியிருந்த இந்தக் கப்பலை அதன் சொந்தக்காரார் ஓர் ஓட்டலாகவும், கண்காட்சிக் கூடமாகவும் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள லோங் பீச்சில் மாற்றத் தீர்மானித்தார். கப்பலைப் பழுதுபார்த்து திருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அதிலிருந்த பிரமாண்டமான புகைக்குழாய்களைக் கழற்றி மேல் தளத்திற்கு கொண்டுவந்தார்கள். அதைப்பழுது பார்த்து மீண்டும் வர்ணம் தீட்டுவது திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களின் நோக்கமாக இருந்தது. அப்போது, முக்கால் அங்குல இரும்பால் தயாரிக்கப்பட்டிருந்த அந்தக் குழாய்கள் முற்றாகத் துருப்பிடித்துப் போயிருந்தன. நாற்பது வருடங்களாக அவற்றின்மேல் மீண்டும் மீண்டும் வர்ணம்தீட்டி வைத்திருந்ததால் அந்த வர்ணத்தைத் தவிர உள்ளே ஒன்றும் இருக்கவில்லை. புறத்தில் பார்வைக்கு நல்ல புகைக் குழாய்கள்போல் அவை இருந்திருந்தாலும் உள்ளே துருப்பிடித்து ஒன்றுமில்லாமல் போயிருந்தன. இப்படித்தான் வேதபாரகர்களும், பரிசேயர்களும் இருந்தார்கள்.*

*உங்களுடைய விசுவாசம் இருதயத்தில் மாற்றங்களைக் கொண்டுவராமல் வெளிப்பார்வைக்கு மட்டும் நீதியானதாக இருப்பதுபோலிருந்தால் உங்களுக்கும் பரிசேயர்களுக்கும் எந்த வித்தியாசமுமில்லை. இருதயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாத விசுவாசம் செத்தவிசுவாசம். அதைத்தான் யாக்கோபு தன் நிருபத்தில் வலியுறுத்துகிறார். சபைக்கு வருவது, ஆத்மீகக்*

*கூட்டங்களுக்கு தவறாமல் போவது, கிறிஸ்துவுக்கு நீங்கள் உழைக்கும் உழைப்பைப்பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்ளுவது எல்லாம் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் நன்றாய் இருக்கும். ஆனால், உங்கள் இருதயம் எப்படி இருக்கிறது? அது தேவநீதிக்குப் பயந்து, தேவநீதியைப் பின்பற்று கிறதா? அது கர்த்தரின் கட்டளைகளுக்கு தலைசாய்த்து நடந்துகொள் கிறதா? என்பதுதான் முக்கியம். கல்லறைகள் கல்லறைகள்தான், வெள்ளை யடித்துவிட்டால் மட்டும் அவற்றின் தன்மை மாறிவிடாது. உங்கள் இருதயத்தைக் கர்த்தரின் வேதத்துக்கு கட்டுப்படச் செய்யுங்கள்.*

**ஆ. அவர்களுடைய நீதி ஒழுக்க நடவடிக்கைகளில் இல்லாமல் வெறும் புறச்சடங்குகளில் மட்டுமே தங்கியதாக இருந்தது.**

*வேதபாரகர், பரிசேயர்களின் விசுவாசம் ஒழுக்கத்தில் அல்லாமல் சடங்குகளிலேயே தங்கியிருந்தது. தங்களுடைய கைகளைக் கழுவி, உபவாசம் இருந்து, ஜெபங்களை ஏறெடுத்து, ஆலயத்துக்குப் போய்வந்து விட்டால் தங்களுடைய ஆத்துமா பரலோகம் போய்விடுவது நிச்சயம் என்று அவர்கள் நம்பினர். இந்தக் கடமைகளைச் செய்வதில் மட்டும் அவர்கள் விசுவாசமாக இருந்தார்கள். அதுவே அவர்களுக்குப் போதுமான தாக இருந்தது. இதன் மூலமாகவே அவர்கள் தங்களுடைய ஆத்தும விடுதலையை எதிர்பார்த்தார்கள். இயேசு சொல்லுகிறார், "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" (மத். 23:15). ஒருவனை சடங்குகளுக்கு அடிமைப்படுத்துவதோடு காரியம் முடிந்து விட்டது. அதுவே மனிதனின் ஆத்தும விடுதலைக்கு அடையாளம் என்று பரிசேயர் நடந்துவந்தார்கள்.*

*பரிசேயர்களைப் போலவே இன்றும் சிந்திக்கிறவர்கள் இருக்கிறார்கள். வெறும் சடங்குகளுக்கு அடிமையாகி மெய்யான ஆத்தும விடுதலையைத் தரும் ஆவிக்குரிய காரியங்களுக்கு இருதயம் பணியமுடியாதபடி எத்தனைப் பாரம்பரிய சபைகள் தமிழினத்தில் இருந்து வருகின்றன. காலங்காலமாக தாங்கள் பின்பற்றிவரும் சடங்குளுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதென்பதில் மட்டுமே குறியாக இருந்து ஆத்தும விடுதலைக்குத் தேவையான வேதம் போதிக்கும் கடமைகளுக்கு இடம் கொடாதபடி தொடர்ந்திருந்து வருகிறார்கள். இதை இன்று பொதுவாகவே சீ. எஸ். ஐ, லூதரன், பாப்திஸ்து போன்ற பாரம்பரிய சபைகளில் பார்க்கலாம். இவற்றின் மத்தியில் ஓரிரு நல்ல சபைகள் இருந்துவிடலாம்; நல்ல மனிதர்களும் இருந்துவிடலாம். ஆனால், பொதுவாகவே இவர்கள் மத்தியில் சடங்குகளுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. சடங்குகளே இவர்களுக்கு வாழ்க்கையாகிவிட்டது. இதற்காக பாரம்பரிய சபைகளுக்கு வெளியில் இருப்பவர்களிடம் தவறை இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. சடங்குகள் எந்தளவுக்கு இந்த சபைப்பிரிவுகளுடைய கண் களை மூடிமறைத்து ஆத்தும விடுதலைக்கு இடங்கொடாதபடி வைத்திருக்கிறது என்பதைக் காட்டுவதே என் நோக்கம். பரிசேயர்களுக்கும் இவர்களுக்கும் எந்தவித்தியாசமும் இல்லை. பரிசேயர்கள் வேதத்தைக்*

கையில் வைத்திருந்தும் சத்தியத்துக்கும், மனந்திரும்புதலுக்கும், கர்த்தரின் கட்டளைகளுக்கும் தங்களுடைய வாழ்க்கையில் இடமளிக்காமலிருந்தது போல் இந்தச் சபைகளும் இன்று இருந்துவருகின்றன. ஆத்மீக அலையை இந்த சபைகளில் பார்க்க முடியாது. சடங்குக்குப் பூஜை செய்து ஆத்து மாவை நித்தமும் இயேசு பேரால் சீரழித்து வருகின்றன இந்த வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகள். இந்தக் கல்லறைகளில் தொடர்ந்திருந்து ஆத்தும தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முயலுகிறவர்கள் பெருந்தவறு செய் கிறார்கள். சிலர் இந்த சபைகளில் உயிர்மீட்சி ஏற்பட ஏதாவது செய்தால் என்ன? என்று முயன்று பார்க்கிறார்கள். செத்த பிணத்துக்கு பூச்சூடி விட்டால் அது எழுந்து நடந்துவிடுமா? எங்கே சடங்கு கர்த்தருடைய இடத்தை அலங்கரிக்கிறதோ அங்கே உயிர்மீட்சிக்கும், ஆத்தும விடுதலைக் கும் வழியில்லை.

**இ. அவர்களுடைய நீதி வெறும் வார்த்தை ஜாலமாகவும், தொட்டதற்கும் ஏதாவது காரணங்களைச் சொல்லி சமாளிப்பதிலுமே தங்கியிருந்தது.**

உதாரணத்திற்கு, அவர்கள் பத்துக்கட்டளைகளில் ஐந்தாம் கட் டளையை தங்களுடைய வசதிக்கேற்ப மாற்றியமைத்துக்கொண்டார்கள். கர்த்தருக்கு முறையாக காணிக்கை செலுத்தினால் பெற்றோரை, அவர்கள் வயதான காலத்தில் கவனிக்கத் தேவையில்லை என்று பரிசேயர்கள் போதித்தார்கள். தங்களுடைய சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு வேதத்தைத் திரித்துப் போதித்து அதன் மூலம் தங்களு டைய கீழ்ப்படியாமையை மறைத்துக்கொண்டார்கள் (மத்தே. 15:4, 5).

நாம் செய்கின்ற பாவங்களை எல்லாம் மறைத்து வேதத்தைப் பயன் படுத்தி அவற்றை நியாயப்படுத்திக் கொள்ளுவது மிகச்சுலபம். “எல்லோரும் இப்படித்தான் செய்கிறார்கள்” என்று சாக்குப்போக்குச் சொல்லி வேதத் தின்படி நடக்காமல் இருப்பது கஷ்டமல்ல. “நான் இந்த நிலையில் இருப்ப தற்கு பெற்றோர்கள்தான் காரணம்” என்று திருந்த முயற்சிசெய்யாமல் இருந்துவிடுவது சுலபம், “மோசமான அரசாங்கத்திற்கு வரிகொடுப்பது உத்தமமல்ல” என்று சொல்லி அரசாங்கத்திற்கு வரிகொடுக்காமல் இருப் பதை நியாயப்படுத்துவது பரிசேயத்தனம். தங்களுடைய பாவங்களைப் பார்க்க மறுத்து, தங்களுடைய இருதயத்தின் கோரத்தை நீக்கிக்கொள்ள வழிதேடாமல் தங்களுடைய செய்கைகளுக்கெல்லாம் வேதத்தைக் காட்டி நியாயப்படுத்திக் கொண்டார்கள் பரிசேயர்.

இதை பரிசேயர்கள், வேத பாரகர்கள் காலத்தில் மட்டுமல்லாமல் இன்றும் தமிழினத்தில் பார்க்கலாம். வேத இலக்கணம் எதுவும் இல்லாத, ஆத்துமாக்கள் மேல் அக்கறையில்லாத, ஊழியத்தைக் குடும்ப வருமானத் திற்கு உதவும் தொழிலாக மட்டும் கருதுகின்றவர்களை, அவர்கள் தங்களுக்கு துதிபாடுகின்றார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக சபை ஊழியங்களுக்கு அனுமதித்து தாங்கள் செய்யும் அநியாயங்களை நியாயப்படுத்தி வருகின்ற ஊழியங்களை நாம் அறியாமலா இருக்கிறோம். வேதத்தை நம்புகின்ற சபை, சுவிசேஷ ஊழியத்தில் அக்கறை காட்டுகிற சபை என்ற போர்வையில் இதைச் செய்கிறவர்களுக்கும் பரிசேயர்களுக்கும்

*என்ன வித்தியாசம் இருக்கிறது? சபையில் ஒழுக்கக் கேடாக நடந்து விடுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தால் தங்களுடைய இயலாமை வெளிப்பட்டுவிடும் என்ற பயத்திலும், தங்களுக்கு மரியாதை இல்லை என்ற காரணத்தாலும் அதைக் கண்டும் காணாமலும் இருந்து விட்டு "எல்லோரும் பாவிகள்தான் என்றும், அவன்தான் இப்போது சபைக்கு வருவதில்லையே அத்தோடு விட்டுவிடுவோம்" என்றும் சாக்குப் போக்குச் சொல்லி நடந்துகொள்ளும்போது பரிசேயர்களின் ஞாபகம் வராமலா இருக்கிறது? போதகராக இருந்தும் தன் பிள்ளைகளுக்கு சாதி, பணவசதி, உயர் குடும்பம் என்ற வசதிகளையெல்லாம் பார்த்து விசுவாசத்திற்கு மதிப்புக்கொடுக்காமல் ஏதோ ஒரு சபைக்குப் போனால் சரி என்று மனதை சமாதானப்படுத்திக்கொண்டு விசுவாசியா, இல்லையா என்றே சரியாகத் தெரியாதவர்களுக்கெல்லாம் திருமணம் முடித்து வைக்கும்போது பரிசேயர்களை நாம் இன்றும் பார்க்கத்தான் செய்கிறோம். ஞாயிறுதோறும் பிரசங்க மேடையில் ஏறி வேதத்தில் ஏதோ ஒரு பகுதியை எடுத்து, அந்தப் பகுதி பற்றித் தனக்கு பெரிதாக ஒன்றும் தெரியாது என்று உள்ளத்தின் அடி ஆழத்தில் உணர்ந்திருந்தும் அதை மூடிமறைத்து, கேட்பவர்கள் சிந்திக்கத் தெரியாத முட்டாள்கள் என்ற நம்பிக்கையில், ஆரவாரத்தோடும், தான் ஸ்பர்ஜன் என்று மக்கள் நினைக்க வேண்டும் என்ற மமதையோடும் பிரசங்கிக்கும் போது பரிசேயர்கள் நினைவு வராமலா போகிறது?*

**ஈ. அவர்களுடைய நீதி கர்த்தரில் தங்கியிராமல் அவர்களுடைய சுயநலத்தையே சார்ந்திருந்தது.**

*வேதபாரகர்கள், பரிசேயர்களைப்பற்றி இயேசு சொன்னார், "நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனை களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்" (லூக்கா 20:46-47). லூக்கா 18:10-14 வரையுள்ள வசனங்களில் ஜெப ஆலயத்துக்கு ஜெபிக்கப்போன இரு மனிதர்களைப்பற்றி இயேசு விளக்கியதை சிந்தித்துப் பாருங்கள். அவர்களில் பரிசேயனுடைய நடத்தை சுயநலத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. பரிசேயன் தன்னைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான். கர்த்தருடைய சந்நிதானத்திலும்கூட அவனால் தன்னை மறக்கமுடிய வில்லை. ஜெப ஆலயத்தில் கர்த்தருக்கு முன் நின்று அவன் "தேவனே! . . . . நான் மற்றமனிதரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்றான் பரிசேயன். மற்றவர்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டி தான் மற்றவர்களை விட நீதியில் சிறந்தவன், கர்த்தர் முன் நிற்கத் தகுதி பெற்றவன், என்று பரிசேயன் பகிரங்கமாக ஜெபம் பண்ணினான். இருதயம் பாழடைந்து போய் ஆத்மீக அறிகுறி எதுவுமே இல்லாமலிருந்தாலொழிய எவராலும் பரிசேயனைப்போல நடந்துகொள்ள முடியாது. பரிசேயர்கள் பழைய ஏற்பாட்டை வாசித்தபோதும், அதை வைத்துப் போதகம் பண்ணின*

போதும் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அடையாமல் இருந்தார்கள். யோவானில் நாம் வாசிக்கும் நிக்கொதேமு இயேசுவை சந்தித்த நிகழ்ச்சி அதைத்தான் நமக்கு விளக்குகிறது. பரலோகம் போவோம் என்று எண்ணிக்கொண்டிருந்த பரிசேயர்கள் பரலோகத்தைவிட்டு வெகுதூரத்தில் அங்கு போய்ச்சேருவதற்கான எந்த ஆத்மீக அடையாளமும் இல்லாமல் இருந்தார்கள்.

பரிசேயர்கள் சுயத்தை விரும்பினார்கள், நேசித்தார்கள், சுயத்திற்காக எதையும் செய்தார்கள், மாம்சம் கேட்பதை எல்லாம் கொடுத்து திருப்தியடைந்தார்கள். தன்னை வெறுத்து கர்த்தரை மகிமைப்படுத்துகிற இருதயம் அவர்களிடம் இருக்கவில்லை. சுயத்தை நேசிப்பவனால் கர்த்தரை நேசிக்க முடியாது. ஒருவன் இரு எஜமான்களுக்குக் கீழ் வேலை செய்யமுடியாது. கர்த்தரை நேசிக்கிறவன் சுயத்தை வெறுக்கிறான். கர்த்தருடைய கட்டளைகளைத் தன்னில் நிறைவேற்றிகொள்ளுவதற்காக சுயஇச்சைகளை அழிக்கிறான். அவனுக்கு கர்த்தரே எல்லாமாக இருக்கிறார்.

பரிசேயருடைய நீதியைவிட உங்களுடைய நீதி உயர்வாக இருக்கிறதா? மற்றவர்களைவிட உங்களை உயர்வாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் செய்கின்ற ஊழியத்தில் பெருமை கொண்டு இருதயத்தில் கர்வத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறீர்களா? சுயபெருமைக்காகவும், மற்றவர்கள் உங்களைப் பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் அலைந்து திரிந்து ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறீர்களா? நீங்கள் பரிசேயர்கள் போல நடந்துகொள்ள எவ்வளவு நேரம் எடுக்கப்போகிறது? எந்தளவுக்கு உங்களுடைய நீதி பரிசேயர்களைவிட உயர்வானதாக இருக்கிறது?

**உ. அவர்களுடைய நீதியில் அன்புக்கோ மற்றவர்களில் இருக்கவேண்டிய கரிசனைக்கோ துளிக்கூட இடமிருக்கவில்லை.**

இயேசு மத்தேயு 23:23ல் பரிசேயர்களைப்பற்றிக் கூறும்போது, "நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்றார். பழைய ஏற்பாட்டுக்கட்டளைகளைப் பின்பற்றி கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கிறோம் என்ற போர்வையில் அவர்கள் சுயத்துக்காக வாழ்ந்து இரக்கமில்லாமலும், அன்புகாட்டாமலும் நடந்துகொண்டார்கள். தங்களுடைய கண்களுக்குப் பாவிகளாகத் தெரிகிறவர்களை அவர்கள் தண்டிப்பதில் தான் முன்நின்றார்களே தவிர, அவர்கள் பாவிகளாக இருக்கிறார்களே என்று இருதயத்தில் எந்தவித ஆதங்கமும் இல்லாமலும், அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கையில் இருந்து விடுபட உதவிசெய்ய வேண்டும் என்ற மனநிலையையும் கொண்டிராமல் இருந்தார்கள். "நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்றார் இயேசு. வேதம் சொல்லுகிறபடி தசமபாகத்தை செலுத்துவதில் பரிசேயர்கள் தவறவில்லை. அதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், அவர்கள் தசமபாகம் செலுத்திய பணம் எப்படி சம்பாதிக்கப்பட்டது என்பதை எண்ணிப்

*பார்க்க வேண்டும்? அந்த தசமபாகத்தை செலுத்திய இருதயத்தில் அன்புக்கு இடமிருந்ததா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அன்புக்கும், இரக்கத்திறக்கும் அவர்களுடைய இருதயத்தில் இடமிருக்கவில்லை. பிறந்தது முதல் கண்கள் குருடனாக தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மனிதனை இயேசு குணப்படுத்தினார். எவரும் செய்ய முடியாத, செய்திராத அற்புதத்தை செய்து காட்டினார். கண்கள் திறக்கப்பட்டவனுடைய பெற்றோர்கள் அதனால் மகிழ்ந்தார்கள். குருடனாயிருந்தவன் இனிப் பிச்சையெடுக்காமல் உழைத்து வாழலாம், பெற்றோர்களைக் கண்களால் பார்த்து அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றலாம். அவர்களோடு பேசி இன்பம் காணலாம். இத்தனை நல்லகாரியங்களை ஒருவன் வாழ்வில் அடைவதற்கு இயேசு காரணமாக இருந்திருக்கிறார். அதையெல்லாம் இருதயத்தில் எண்ணிப்பார்க்காமல், கர்வத்தாலும், பொறாமையாலும் இயேசுவின் செய்கையில் குற்றங்கண்டார்கள் பரிசேயர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் அன்பு, இரக்கம் என்ற வார்த்தைகளுக்கே இடமிருக்கவில்லை. விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிறவர்கள் அதிக ஆக்கினை அடைவார்கள் என்று இயேசு லூக்கா 20:47ல் பரிசேயர்களை மனதில் வைத்தே சொன்னார். தங்களைப் பார்த்துக் கொள்ளவும் வழியற்று நின்ற விதவைகளைக் கொடுமைப்படுத்தி பரிசேயர்கள் வாழ்ந்ததாலேயே இயேசு அப்படிச் சொன்னார்.*

*இதை எழுதுகிறபோது என்னால் பரிசேயர்களைப்போல நடந்து முழுநேர ஜெபக்கூட்டம், ஆசீர்வாதக்கூட்டம் என்று நடத்தி பணவசதியற்ற பாமர மக்களை பஸ், வண்டி வைத்து அழைத்துவந்து பொய்யான வாக்குத்தத்தங்களையெல்லாம் அள்ளியெறிந்து கூட்டம் முடியுமுன் காணிக்கை என்ற பெயரில் அவர்கள் காது, மூக்கு, கழுத்தில் இருப்பதையெல்லாம் ஊழியத்தின் பெயரில் பிடுங்கிக் கொள்ளுகிற தமிழ்ப் பச்சோந்திப் பரிசேயப் பாம்புகளை எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. இவர்களுக்கும் பரிசேயர்களுக்கும் என்ன வித்தியாசம்? இதைத்தான் பரிசேயர்கள் செய்தார்கள் அதனால்தான் இயேசு அவர்களை “சர்ப்பங்களே, விரியன் பாம்புக்குட்டிகளே” என்று அழைத்தார். நரகாக்கினையைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் கிடைக்காது என்றார் (மத்தேயு 23:33).*

*அன்பிருக்கிற இருதயம் பாமர மக்களை வைத்து பணம் சம்பாதிக்கப் பார்க்காது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் ஊழியக்காரர்கள் இன்றைக்கு அதிக அக்கறை காட்டும் ஊழியம் பெற்றோர்கள் இல்லாத குழந்தைகளைப் பராமரிப்பது. அநேகர் இந்த ஊழியத்தில் மற்ற ஊழியங்களைவிட அதிக அக்கறை காட்டுவது காரணத்தோடுதான். ஏன்? இதைச் செய்தால்தான் மக்கள் அதுவும் வெளிநாட்டவர் இருதயம் கசிந்து பணம் அதிகமாகக் கொடுப்பார்கள் என்பதால்தான். சபை ஊழியத்துக்கு பணம் அதிகமாக வராது, இதைச்செய்தால் அதிக பணம் வரும் என்பது அநேகருடைய எண்ணம். இதற்காக இந்தவிதமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவ வருகிற எல்லோருமே பண ஆசையுள்ளவர்கள், இதயமற்றவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை.*

குப்பையில் கிடைக்கும் குண்டுமணிபோல் கெட்ட எண்ணங்கொண்ட பலருக்கு மத்தியில் ஒருசில நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**ஊ. தங்களுடைய நீதி இவ்வுலகில் அதிக லாபத்தைத் தங்களுக்கு அளித்ததோடு நித்திய ஜீவனையும் பெற்றுத்தந்ததாக அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள்.**

இந்த உலகத்தில் ஒருவர்கூட நீதியுள்ளவர்களாகப் பிறக்கவில்லை என்பதைப் பரிசேயரும், வேதபாரகரும் உணரவில்லை. பிறக்கிற எல்லோருமே பாவத்தோடு பிறந்து பாவம் நீக்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எவருமே கர்த்தருடைய கிருபையை அடையக்கூடிய நல்லதை வாழ்க்கையில் கொண்டிருக்கவில்லை என்பதை அவர்கள் உணராதிருந்தார்கள். பாவிகளாகிய எவரும் சுயமாக வாழ்க்கையில் நல்லதை செய்யக்கூடிய நிலையில் இல்லை என்பதும் அவர்களுடைய புத்திக்கு எட்டாமலிருந்தது. தங்களுடைய சுயநலத்தின்படி பத்துக் கட்டளைகளைத் தாங்கள் விரும்பியபடி செய்துவந்தால் கர்த்தர் தங்களை நீதிமான்களாக ஏற்றுக்கொள்வார் என்ற கனவுலகில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஜெப ஆலயங்களிலும், தெருமுனைகளிலும் நீண்ட ஜெபங்களை ஏறெடுத்து, தசமபாகத்தைத் தவறாது செலுத்தி, பிரசங்கங்கள் செய்து வருவதால் நிச்சயம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், பரலோக வாழ்வும் நமக்குண்டு என்ற போலித்தனமான எண்ணத்தோடு வேதபாரகரும், பரிசேயரும் காலத்தைப் போக்கி வந்தார்கள். இது எத்தனைக் கொடுமை! மத்தேயு 23ல் இயேசு கிறிஸ்து இவர்களைப்பற்றிக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தித் தாக்கியிருப்பதற்குக் காரணம் அத்தகைய எண்ணங்களைக் கொண்டிருக்கிற எவருமே பரலோகம் போக முடியாது என்பதை உணர்த்தத்தான். நித்திய ஜீவன் என்பது பத்து பைசாவுக்கு வாங்கிவிடக்கூடிய சுவீட் மிட்டாயல்ல. அதை எவரும் பணத்தைக் கொடுத்தோ, நற்கிரியைகளை வாழ்க்கையில் செய்தோ அடைய முடியாது. அதை ஒருவர் வேறு எவருக்கும் ஞானஸ்நானத்தின் மூலமோ, ஜெபத்தின் மூலமோ கொடுத்துவிடவும் முடியாது. உண்மையில் நித்திய ஜீவனை ஒருவருக்கு கொடுத்துவிடக்கூடிய பாவமனிதன் இந்த உலகத்தில் பிறந்துவிடவில்லை. அதைப் பாவிகள் அடைவதற்கு தன்னையே பலியாகக்கொடுத்த பாவமற்ற மனிதனாகப் பிறந்தவர் இயேசு மட்டுமே.

இதை வாசிக்கின்ற உங்களில் சிலர்கூட இந்த வேதபாரகரையும், பரிசேயரையும் போல வாழ்ந்துகொண்டிருக்கலாம். அப்படியிருந்தால் உடனடியாக மனந்திரும்புங்கள். நித்திய ஜீவனை இயேசுவிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள். உங்களைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்காதீர்கள். பரிசேயருடைய நீதியைவிட அதிகமான நீதியுள்ள வாழ்க்கையை நாம் வாழ இயேசு கிறிஸ்து மட்டுமே உதவமுடியும். அவர் இலவசமாகக் கொடுக்கும் கிருபையும், விசுவாசமும் மட்டுமே அவரோடு ஐக்கியத்தில் வர நமக்கு உதவ முடியும். உங்களுடைய இருதயங்களைக் கர்த்தருக்கு முன் சோதித்துப் பார்த்து, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து அவருக்கு முன் உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்.

# பற்றியெரியும் ஸ்ரீ லங்கா

ஆறு வருடங்கள் நாட்டில் போரின்றி அமைதியை ருசி பார்த்து பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துகொண்டிருந்த ஸ்ரீ லங்கா மறுபடியும் போரில் குதித்திருக்கிறது. வட பகுதி, நாட்டின் மற்றப்பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கில் அராஜகம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. போர் விமானங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை நோக்கிப் பறந்து குண்டு வீசியபடி இருக்கின்றன. ஆங்காங்கு வீசப்படும் குண்டுகளால் இறக்கிறவர்கள் தொகை அதிகரித்து வருகிறது. ஸ்ரீ லங்கா அரசின் படைகளும், விடுதலைப் புலிகளும் களமிறங்கி மும்முறமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதுவரை அமைதி காத்துக்கொண்டிருந்த பிற நாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் வேலை முடிந்தது என்று மூட்டையைக் கட்டிவிட்டனர். இலட்சக்கணக்கானவர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே மறுபடியும் அகதிகளாக மாறிவிட்டிருக்கின்றனர். அன்றாடம் இந்தியா நோக்கி அகதிகள் கடலில் இடப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளையும் பொருட்படுத்தாமல் உயிரைப் பனயம் வைத்து நகர்ந்து கொண்டிருக்கின்றனர். நாட்டின் தலைநகரத்திலும், தெற்குப் பகுதியிலும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்கள் ஒவ்வொரு சிறுபான்மைத் தமிழனையும் சந்தேகத்தோடு பார்த்து வாழும் அவல நிலைக்கு நாடு மறுபடியும் திரும்பியிருக்கிறது. போர் வீரர்களும், போலிஸும், விசேஷ படையினருந்தான் நாட்டை ஆளுகிறார்களோ என்பதுபோல் அவர்களுடைய நடமாட்டம் தெற்கில் பெருகி மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும், நகர்வுக்கும் பெரும் தொல்லையை ஏற்படுத்தியிருக்கிறது. அன்றாடம் கடத்தப்படுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மனித உரிமைகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழர்கள் தெற்கில் தெரு நாயைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்று கூறியிருக்கிறார். இதுதான் ஸ்ரீ லங்காவின் இன்றைய அவல நிலை.

இதற்கெல்லாம் யார் காரணம் என்று அரசியல் பேசுவதல்ல நம் நோக்கம். தவறு எல்லோர் மேலும் இருக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து நடந்துவரும் அரசியல் மோசடிகளும் இதற்கு ஒரு முக்கிய காரணம். பொது மக்கள் இன்று நாட்டில் பெருந்துன்பத்தை அநுபவித்து வருவது மட்டும் உண்மை. பெரும்பான்மையினரான சிங்கள மக்களும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. சிறுபான்மை மக்கள் நிலையோ விளக்கமுடியாதளவுக்கு மோசமாகிவிட்டது. ராக்கெட் வேகத்தில் அதிகரித்து வரும் விலைவாசி மக்களின் வயிற்றைப் குடைந்துகொண்டிருக்கிறது. இதற்கு மத்தியில் கிறிஸ்தவ தமிழ்ப் போதகர்களும், சிங்களப் போதகர்களும் சுடப்பட்டு மாண்டிருக்கின்றனர். கிறிஸ்தவ ஊழியங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இருதயத்தைக் கலக்கும் இத்தனைப் பிரச்சனைகளுக்கு மத்தியில் கிறிஸ

தவர்கள் கர்த்தருடைய இறையாண்மையை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. நாடுகளுக்கெல்லாம் எல்லைகளை விதித்து, அரசாங்கங்களைக் கொடுத்து சகலத்தையும் நிர்வகித்து வரும் அவருக்குத் தெரியாமல் இவை யெல்லாம் நடந்துவிட முடியாது. எந்த நாட்டில் நிகழும் எந்தக் கொடுமை களுக்கும் அவர் காரணமல்ல. இருந்தபோதும் அவரை மீறி எதுவும் நடக்க முடியாது. மனிதனின் பாவத்தின் அகோர வெளிப்பாடுகளைத்தான் இன்று நாம் ஸ்ரீ லங்காவில் பார்க்கிறோம். அங்கு நடந்துவரும் நிகழ்வு களுக்கு வேறு காரணங்கள் இருக்க முடியாது. பாவத்தின் கோரம் அதிகரிக் கிறபோது அது எல்லோரையும் தொடாமல்விடாது. அமைதி அந்த நாட்டுக்குத் தேவைதான். அந்நாட்டு மக்களின் அன்றாடத் தேவைகள் நிறைவேறி அவர்கள் நிம்மதியோடு வாழவேண்டியது அவசியம். நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபடும் நல்லரசும் அங்கு தேவை. இவையெல் லாம் இன்று உடனடியாகத் தேவைப்பட்டபோதும் இவை மட்டுமே அந்த நாட்டு மக்களுக்கு நிலையான நிம்மதியைப் பெற்றுத் தந்துவிட முடியாது. எத்தனையோ வருடங்கள் அமைதி குடிகொண்டிருந்த கென்யா நாட்டில் இரத்த ஆறு பாயவில்லையா? அதற்கு எவ்வளவு நேரம் எடுக்கப்போகிறது? இந்த உலகத்து சமாதானம் மட்டும் மக்களை முழுமையாகக் காத்துவிடாது. சுனாமி போன்ற இயற்கைக் கோரங்கள்கூட மனிதனின் மனதை மாற்றி விட முடியாது. இன்று ஸ்ரீ லங்காவுக்கு தேவை நம்மாண்டவராகிய இயேசு கிறிஸ்துதான். நிலையான சமாதானத்தையும், அமைதியையும் அவரால் மட்டுமே கொடுக்க முடியும். இனவெறி, மதவெறி, இரத்தப்பசி, தன்னலம், அதிகாரமோகம் போன்ற அத்தனை மாம்சத்துக்குரிய இச்சைகளை யெல்லாம் இல்லாமலாக்கிவிடும் வல்லமை இயேசுவுக்கு மட்டுமே உண்டு. அவருடைய சுவிசேஷத்தை நிராகரித்து வரும்வரை உலகில் எந்த நாட்டு மக்களும் நிம்மதியாய் இருந்துவிட முடியாது. பற்றியெரியும் ஸ்ரீ லங்காவுக்கு பரமன் இயேசு மட்டுமே விடுதலையளிக்க முடியும்.

## முன்னைய இதழ்கள் பற்றிய அறிவிப்பு:

*முதல் முதலாக பத்திரிகையைப் பெற்று வாசிக்கின்ற வாசகர்கள் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களையும் அனுப்பிவைக்க முடியுமா, என்று அடிக்கடி எழுதிக் கேட்டு வருகிறார்கள். உண்மையில் அப்படி எனக்குத் தெரிந்த எந்தப் பத்திரிகையும் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களை அனுப்பித் தருவ தில்லை. அப்படி மறுபதிப்புச் செய்து அனுப்பிவைப்பதென்பது அதிகமான செல வேற்படுத்தும் காரியம். அச்சிடும் செலவு மட்டுமல்லாமல், தபால் செலவும் மிக அதிகம். கர்த்தருடைய கிருபையினால் இந்த ஊழியத்தில் ஆர்வமுள்ள ஒருவரின் உதவியால் நாம் பழைய இதழ்களை மறுபடியும் அச்சிட்டு வைத்திருக்கிறோம். படிக்க வேண்டும் என்று கேட்டு எழுதுகிறவர்களுக்கு அவற்றை அனுப்பி வருகி றோம். இருக்கின்ற இதழ்கள் அனைத்தும் முடிவடைந்தவுடன் மறுபடியும் அவற்றை அச்சிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. இருப்பவற்றை நாம் பல வருடங்களுக்குத் தொடர்ந்து வைத்திருப்பதையும் விரும்பவில்லை. ஆகவே, ஆரம்பத்திலிருந்து வெளி வந்த இதழ்கள் இல்லாத வாசகர்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தயவுசெய்து உடனடியாக சரியான முகவரியை பின்கோட்டுடன் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும். 2008ம் ஆண்டுக்குப் பிறகு பழைய இதழ்களை அனுப்பிவைப்பதை நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். – ஆசிரியர்.*




சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜனைப் பற்றி தமிழில் சில நூல்கள் இருக்கின்றன. பத்தோடு பதினொன்றாக இது ஏன்? என்ற கேள்வி எழலாம். ஒரு பெருமனிதரின் வாழ்க்கை, வரலாறு பற்றிய நூல்கள் வரலாற்றுக் குறிப்புகளைத் துல்லியமாகக் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு அந்த மனிதரின் சிறப்பம்சங்களை மட்டும் அவை வர்ணிப்பதாக இருக்கக்கூடாது. முழு மனிதரையும், அவருடைய ஊழியத்தையும் உள்ளபடியே விளக்குவதாக இருக்க வேண்டும். இந்த நூலின் சிறப்பம்சம் ஸ்பர்ஜன் சத்தியத்துக்காக நடத்திய போராட்டம் என்றுதான் சொல்லுவேன். அதை ஜெரமி வோக்கர் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

**கிடைக்குமிடம்:**

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**

57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004

தொலைபேசி எண்: 9994181010

**கிருபை இலக்கிய சேவை**

19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 14 ஏப்பிரல் - ஜூன் 2008 இதழ் 2

1. யாக்கோபு - அதிகம் அலட்சியம் செய்யப்பட்ட நூல்

2. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

3. யாக்கோபு - பிரசங்கிகளுக்கு இலக்கணம்

4. இங்கிலாந்தில் சீர்திருத்தம் - 2 (திருச்சபை வரலாறு)

5. பரிசேயர்களின் நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் . . .

6. பற்றியெரியும் ஸ்ரீ லங்கா

Terau Print